Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

English Academy
Email: thangan 672002 @ yahoo.com
T.P. - 021-2222588
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பிரதான வீதி, சித்தன்கேணி.
உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்
Better Place For Your Children
(சி-561)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 07 (07.02.2003) வெள்ளிக்கிழமை இதழ் :128

## தலைவரால் முன்னெடுக்கப்படும் போராட்டம் தமிழீழ நிர்வாக அலகை அமைத்துள்ளது!

### 60 சதவீத நிலப்பரப்பு எமது கட்டுப்பாட்டில் - தமிழ்ச்செல்வன்



விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்ற எங்களுடைய தேசியத் தலைவரினால், பெரும் தடைகள் தகர்க்கப்பட்டு, பரந்த நிலப்பரப்பை மீட்டு, எமது ஆளுகைக்கு உட்படுத்தி - தமிழீழ நிர்வாக அலகு இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

- என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பேர்ளினில் தெரிவித்துள்ளார்.

கடந்த பல கட்டப் பேச்சுக்களின் போது, பல விடயங்கள் பற்றி உடன்பாடு காணப்பட்டதே தவிர அவை நடைமுறைப்படுத்தப்பட்டு மக்களுக்கு, பயன்பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

ஐந்தாம் கட்டப் பேச்சுக்காக ஜேர்மன் தலைநகர் பேர்ளினுக்குச்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்தாம் சுற்றுப் பேச்சுக்கள் பேர்ளினில் இன்று ஆரம்பம்

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஐந்தாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் இன்று ஜேர்மனியின் பேர்ளின் நகரில் ஆரம்பமாகின்றன.

பேர்ளினில் உள்ள பான் நோர்டிக் ஹவுஸில் உள்ள நோர்வே தூதரகத்தில் 'எம்-1' இலக்க மாநாட்டு மண்டபத்தில் இப்பேச்சுக்கள் நடக்கவிருக்கின்றன.

இன்று காலை 9 மணியளவில் ஆரம்பமாகும் பேச்சுக்கள் நாளை வரை நீடிக்கும். பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நாளை மாலை 3 மணியளவில் பத்திரிகையாளர்களுக்கான சந்திப்புக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை நண்பகல் 12 மணிமுதல் பத்திரிகையாளருக்கான நிலையம் திறக்கப்பட்டிருக்கும் என்றும் பத்திரிகையாளர்கள் இணையம் மூலமும் சந்திப்பில் கலந்துகொள்ள பதிவு செய்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய பேச்சுக்களின் போது, வட-கிழக்கு மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாகவும், கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அமைதி நிலைக்கவேணுமென்டதுதான் எல்லாற்ற விருப்பமும். நிலைக்குமா எண்டு கேட்டால் என்ன அர்த்தம்...?

# புஷ்ஷின் விசேட பிரதிநிதி டேவிட் யாழ். நிலவரம் அறிய விஜயம்!

## புலிகளின் ஆயுதமே எமக்குப் பாதுகாப்பு யாழ். பிரமுகர்கள் அவரிடம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் நேரடிப் பிரதிநிதியும் தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க வெளியுறவு அமைச்சின் அதிகாரியுமான டேவிட் குட் தலைமையிலான குழுவொன்று, நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான மாற்றங்கள் பற்றி பல தரப்பினருடனும் ஆராய்ந்த இக்குழு, இது பற்றி அமெரிக்க அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது. இந்திய இராணுவ நிபுணரின் விஜயத்தைத் தொடர்ந்து உடனடியாகவே இவ்வருகை நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.**



அமெரிக்க உயரதிகாரியான டேவிட் குட், அமெரிக்க ஜனாதிபதியான புஷ்ஷின் பணிப்பின்பேரிலேயே இவ்விஜயத்தை மேற்கொண்டதாகத் தெரியவருகின்றது.

அமெரிக்கக் குழுவினர் நேற்றுக் காலை பலாலி விமானப் படைத்தளத்தை வந்தடைந்ததும், யாழ். படை உயரதிகாரிகளுடன் முக்கிய மாநாடு ஒன்றை நடத்தினர். இதன் போது உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகவும் குடாநாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலை குறித்தும் படை அதிகாரிகளிடம் விபரங்களைக் கேட்டறிந்துகொண்டனர்.

இதனைத்தொடர்ந்து, யாழ். நகரை வந்தடைந்து, காலை 11 மணியளவில் ஆயர் இல்லத்தில் சர்வமதத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், கத்தோலிக்க நீதி சமாதான ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்திரு பேணாட், நல்லை ஆதீனக் குருமுதல்வர், அங்கிலிக்கன் திருச்சபையின் வணபிதா நேசக்குமார், மௌலவி அப்துல் நாஸார், மூபின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் நிலைக்குமா? ஆயரிடம் நம்பியார் கேள்வி!

### மன்னார் பாதுகாப்பு வலயங்கள் பற்றியும் ஆய்வு

(மன்னார்)

தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுமா என்றும், தற்பொழுது நிலவும் சமாதானச் சூழல் தொடர்ந்தும் நிலைக்குமா என்றும் நேற்று மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய இராணுவ நிபுணர் லெப். ஜெனரல் சதீஸ் நம்பியார், மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையிடம் சமாதான விடயங்கள் தொடர்பாகக் கேள்வி எழுப்பினார்.

நேற்று நண்பகல் 1 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லத்திற்கு சதீஸ் நம்பியார் விஜயம் செய்தார்.. இவருடன் மன்னார் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பெர்ணான்டோவும் சென்றிருந்தார்.

மன்னார் ஆயர் ஜோசப் ஆண்டகையுடன் சுமார் ஒன்றரை மணிநேரமாக பல்வேறு விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது.

இச்சந்திப்பில் உயர் பாதுகாப்பு வலய விவகாரங்களை விட சமாதான முயற்சிகள் வெற்றி பெறுமா என்றும் தற்போதைய சமாதான சூழ்நிலை நின்று நிலைக்குமா என்பது குறித்து அறிந்து கொள்வ

(10ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயம் பற்றி அமெரிக்க அதிகாரியின் கரிசனை!

### கேள்வி மேல் கேள்வி கேட்டு ஆராய்வு

"குடாநாட்டிலுள்ள பாதுகாப்பு வலயங்கள் முழுமையாக அகற்றப்பட்டால் அப்பகுதிகளுக்கு பொதுமக்கள் சென்று மீள் குடியமர்வார்களா" இவ்வாறு அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான அதிகாரியான டேவிட் குட் கேள்வி எழுப்பினார்.

நேற்று யாழ்.நகருக்கு விஜயம் செய்தபோது மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளை பாசையூரிலுள்ள 'யாழ். பீச் இன்' ஹோட்டலில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்படி வினாவை எழுப்பினார்.

மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

### மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர்

## சர்வதேச தரத்தில் மிதிவெடி அகற்றுதல்; 80 பேர் பயிற்சியைப் பூர்த்தி செய்தனர்!

மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் சர்வதேச தரத்திலான மிதிவெடி அகற்றும் பயிற்சியினைப் பெற்றுவந்த 80 பேர் நேற்று தமது பயிற்சிகளை முடித்து வெளியேறினர்.

இவர்களது, பயிற்சியினைப் பூர்த்திசெய்து வெளியேறும் நிகழ்வு, மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பணிப்பாளர் பரணி தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்வில், மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் இணைப்பாளர் யோகன், மற்றும் என்.ரி.ஏ. நிறுவனப் பிரதிநிதி லோக்கா, மக் நிறுவனப் பிரதிநிதி டோன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர். கண்ணிவெடி அகற்றும் பிரிவின் இணைப்பாளர் யோகன் அங்கு உரையாற்றும்போது -

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-518)

# அதிர்ஷ்ட வாரம் 07.01.2003 - 13.01.2003

### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

தொழிலில் அதிக ஈடுபாடும் அக்கறையும் காட்டுவீர்கள். பொருள் வரவைக் கொடுக்கும். ஆனால் செலவுக்கும் இடமுண்டு. இடையிடையே தேகசுகம் பாதிக்கப்படும். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும் வாகனங்களால் அதிக நன்மையுண்டு. பெண்களுக்கு மன அமைதியும் குடும்பச் சிறப்பும் உண்டு. மாணவர்கள் நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

### இடபம்

கார்த்திகை 2, 3, 4 ஆம்பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1, 2ஆம் பாதம்

தேகசுகம் உண்டு. மனஅமைதி காணப்படும். எந்தவிடயத்திலும் நிதானமாக சிந்தித்து செயற்படுவீர்கள். நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும். தொழில் சிறப்புண்டு. வார பிற்பகுதியில் உடல்நிலை பாதிக்கப்படும் வியாபாரிகளுக்கு அதிக லாபத்தை எதிர்பார்கக முடியாது. போட்டி, பொறாமை அதிக மிருக்கும் பெண்களுக்கு குடும்பத்தில் இடையிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படும்.மாணவர்களுக்கு முன்னேற்றமான காலம்.

### மிதுனம்

மிருகசீரிடம், 2, 3ஆம்பாதம் திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 ஆம் பாதங்கள்

திருமண வாய்ப்புக்கள் கைகூடும். குடும்பத்தில் சுபகாரியம் நிகழும் மனம் சந்தோஷமாக இருப்பீர்கள். தொழிலில் ஸ்திரத்தன்மை காணப்படும். பெரியோர் ஆதரவும் ஆசியும் கிடைக்கும். பிரயாணத்தால் நன்மையுண்டு. வியாபாரிகளுக்கு முதலீட்டிற்குரிய லாபம் கிடைக்கும் பெண்களுக்கு குடும்ப சிறப்புண்டு. கணவனின் ஆதரவிருக்கும்.

### கர்க்கடகம்

புனர்பூசம், 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

உடல் நிலை பாதிக்கப்படும் பிரிவுத் துயர் வாட்டும் மனதில் சோர்வு காணப்படும். எதையோ இழந்தது போன்ற உணர்வு இருக்கும் இருப்பினும் தொழிலில் முன்னேற்றமுண்டு. பொருள் வரவுக்கு இடமுண்டு. வியாபாரிகளுக்கு மத்திமமான பலனே உண்டு. பெண்களுக்கு அடிக்கடி குடும்பத்தில் நோயின தாக்கம் காணப்படும். செலவு அதிகமாகும். மாணவர்களுக்கு உற்சாகமில்லாத தன்மை காணப்படும்.

### சிங்கம்

மகம், பூசம், உத்தரம், 1ஆம் பாதம்

தேகசுகம் பாதிக்கப்படும். மன அமைதி இராது. பணத் தட்டுப்பாடு இருக்கும். உற்சாகம் இராது. பிரயாணக் கஷ்டமுண்டு. வெளியூரிலிருந்து உதவிகள் கிடைக்கும். வாகனம், பூமியால் செலவைக் கொடுக்கும். வியாபாரிகளுக்கு போட்டி அதிகமிருக்கும். பொருள் கைவிட்டுப்போகும். மனக்கஷ்டம், ஆரோக்கியக் குறைவு போன்றன இருக்கும்.

### கன்னி

உத்தரம், 2, 3, 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை, 1, 2ஆம் பாதம்

தொழில் சிறப்புண்டு. சுபகாரியங்கள் நிகழும். வெளியூர் பிரயாணத்தால் நன்மையுண்டு. வாகனம், பூமி லாபம் தரும். நண்பர்கள் உதவுவார்கள். தேகசுகம் உண்டு. வியாபாரிகளுக்கு நல்லலாபம் கிடைக்கும் எடுத்த காரியத்தில் வெற்றியடைவீர்கள். பெரியோர் மதிப்பு இருக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி, களஸ்திர சுகம் உண்டு.

### துலாம்

சித்திரை 3, 4ஆம் பாதம், சுவாதி, விசாகம், 1, 2, 3ஆம் பாதம்

எடுத்தகாரியத்தில் வெற்றியடைவீர்கள். அதிக பிரயாசையும் தீவிரமான முயற்சியுமே வெற்றியை பெற்றுக் கொடுக்கும். உடல் நிலை பாதிக்கப்படும். சளி இருமல் வாட்டும். கூட இருப்பவர்களால் ஆபத்து நேரலாம். அவதானம் தேவை. வியாபாரிகளுக்கு மந்தமான காலமாக இருக்கும். பெண்களுக்கு கணவர், பிள்ளைகளால் கவலை உண்டு. அமைதி இராது. மாணவர் கல்வியில் அதிக முன்னேற்றம் காணப்படமாட்டாது.

### விருச்சிகம்

விசாகம், 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

எதிர்ப்புகள் கஷ்டங்களுண்டு. தொழிலில் நன்மையுண்டு. வெளியூரிலிருந்து உதவிகள் கிடைக்கும். நீண்டநாளாக எதிர்பார்த்த நன்மை கைகூடும். வியாபாரிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் நன்மையாயிருக்கும். பெண்களுக்கு திருமண வாய்ப்புண்டு. குடும்பத்தில் சந்தோஷமுண்டு. மாணவர்கள் கல்வியில அதிக கவனம் செலுத்த வேண்டும்.

### தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்

வாகனத்தால் செலவுக்கு இடமுண்டு. வெளிநாட்டு பிரயாணங்கள் தாமதமாகும். பொருளாதார நிலை சீரடையும். பிரயாணங்கள் தவிர்ப்பது நல்லது. வியாபாரிகளுக்கு அதிக நன்மை கிடைக்காது. பெண்களுக்கு விவாக முயற்சிகள் தாமதமடையும். மாணவர்கள் விளையாட்டுக்களில் முன்னேற்றமடைவர்.

### மகரம்

உத்தராடம், 2, 3, 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதம்

குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும். விவாக முயற்சிகள் கைகூடும். உறவினர் நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். தொழில் நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும் வாகன யோகம் உண்டு. பிரயாணத்தால் நன்மையுண்டு. வியாபாரிகள் அதிக லாபமடைவர். பெண்களுக்கு குடும்பசுகம் உண்டு. மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றமான காலம்.

### கும்பம்

அவிட்டம், 3, 4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1, 2, 3ஆம் பாதம்

மனதில் சந்தோஷமும் அமைதியும் காணப்படும். மனைவி பிள்ளைகளின அன்பும் ஆதரவும் கிடைக்கும். பகைவரால் தொல்லைகள் உண்டு. தொழிலதுறையில் சமபலன் உண்டு. வியாபாரிகளுக்கு பகைவரால் கேடு விளையும்.பெண்களுக்கு உடல்நிலை பாதிக்கப்படும். மாணவர்களுக்கு கல்வி உற்சாகம் இராது.

### மீனம்

பூரட்டாதி, 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி

குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். நீண்ட நாள் எதிர்பார்த்த ஒன்று கிடைக்கும். தேக ஆரோக்கியம் உண்டு. வெளியூர் பிரயாணங்களுக்கு இடமுண்டு. வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். புதிய முதலீடுகள் அதிகரிக்கும். பெண்களுக்கு திருமண வாய்ப்பு கைகூடும். மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை அமையும. மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவார்கள்.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

# முளைய விருத்தி மூலம் உள்ளூரில் குறைந்த செலவில் உருளைக்கிழங்கு

குறைந்த செலவில் - அதிகூடிய விளைச்சலைத் தரக்கூடிய உருளைக் கிழங்கு இனமொன்றை கம்பளை நிலம்பேயிலிலுள்ள இழையவிருத்தி ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்திருக்கிறது.

இது தொடர்பாக நிலம்பே இழைய விருத்தி ஆராய்ச்சி நிலைய இயக்குநர் வித்தியானந்தன் தகவல் தருகையில் -

இழைய விருத்தி முறை மூலம் உள்ளூரிலேயே இந்த இன விருத்தி உருளைக்கிழங்கை உருவாக்கியுள்ளதாகவும், இதனைத் தம்மால் விவசாயிகளுக்கு ஒரு ரூபாவுக்கு ஒன்று என்ற அடிப்படையில் விற்பனைசெய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

இந்த உருளைக்கிழங்கு யாழப்பாணம், நுவரெலியா, கண்டி, பதுளை ஆகிய இடங்களில் பயிர்செய்யப் படவுள்ளது. மிகவும் மலிவாகப் பெறக்கூடிய இந்த விதை உருளைக் கிழங்கு, நோய்களைத் தாங்கி வளரக்கூடியது.

இந்தியாவில் குறைந்த செலவில் விதை உருளைக்கிழங்கைப் பெறமுடிவதால் அங்கு குறைந்த விலையில் உருளைக்கிழங்கை விற்க முடிகிறது. தற்போது இங்கும் விதை உருளைக்கிழங்கை உற்பத்தி செய்தால் உருளைக்கிழங்கின் விலையை கணிசமாகக் குறைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## புரிந்துணர்வு உடன்பாடு

# ஒரு வருடப் பூர்த்தி நாளில் சமாதானச் சுடரேற்ற ஏற்பாடு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுககும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்டு ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு, நாடளாவிய ரீதியில் சமாதான பூஜைகள் மற்றும் மதவழிபாட்டு நிகழ்ச்சிகளுக்கு அரசு ஏற்பாடு செய்துவருகின்றது.

இதன் ஒரு கட்டமாக, ஒரு வருட பூர்த்தி தினத்தன்று நாடளாவிய ரீதியில் சமாதானச் சுடரேற்றும் வைபவங்களுக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இவ்விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடனும் அரசு தொடர்பு கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்திலும் இவ்வாறான மத வழிபாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.(01)

# சமாதான முன்னெடுப்புக்களில் மகளிர் அபிலாஷை - கருத்தரங்கு

சமாதான முன்னெடுப்புக்களில் 'மகளிர் அபிலாஷைகளை இணைத்தல்' என்ற பொருளில், மகளிர் அபிவிருத்தி நிலையம் கருத்தரங்கொன்றை நாளையும் நாளை மறுதினமும் யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இன்று நாட்டில் போர்நிறுத்த சூழலில் சமாதானத்தின் இன்றியமையாத தேவைகளை மக்கள் உணர்ந்து வருகின்றனர். இச்சந்தர்ப்பத்தில் மகளிர் தமது பங்கினை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதோடு, மகளிர் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை இனங்கண்டு, முக்கியமானவற்றிற்கு முன்னுரிமை அளித்து சமாதானத்தின் முக்கியமானவற்றை முன்னுரிமை அடிப்படையிலும் பேச்சு வார்த்தைகளின் அடிப்படையிலும் வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைப்பதற்குரிய வளமான செயற்திட்டங்கள் இக்கருத்தரங்கில் ஆராயப்படவுள்ளன.

மகளிர் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய பொருத்தமான தீர்வினை ஆராய்வதற்காக, ஒரு மகளிர் உப குழு அமைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. அக்குழுவின் பொறுப்புக்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றியும் இக்கருத்தரங்கில் ஆராயப் படவுள்ளது.

இக்கருத்தரங்கை பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் (பீடாதிபதி, மருத்துவபீடம், யாழ்ப்பாணம்) ஆரம்பித்து வைக்கவுள்ளார். இக்கருத்தரங்கின் முக்கிய பேச்சாளர்களாக கலாநிதி தீபிகா உடகம (தலைவி, சட்டபீடம், கொழும்பு பல்கலைக் கழகம்), நிமால்கா பெர்ணான்டோ (தலைவி - இனசாதி, ஒழுங்கு முறைகளுக்கு எதிரான சர்வதேச இயக்கம் - (IMAADR) ஜப்பான்), வீ.ரீ.தமிழ்மாறன் (விரிவுரையாளர், சட்ட பீடம், கொழும்பு பல்கலைக் கழகம்), எம்.செல்வின் இரேனியஸ் (பணிப்பாளர் - சிறான்), எஸ்.சிவகுருநாதன் (நிர்வாக இயக்குநர் - ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம்), வே.சேந்தன் (பத்திரிகையாளர்) ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் பெண்கள் தொடர்பான அமைப்புக்கள், ஆர்வலர்கள் யாவரும் பங்குகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்படுகின்றனர்.


## தேவை

(சி-567)

யாழ்.வணிகர் கழகத்திற்கு ஆண் அலுவலக உதவியாளர் (Peon) ஒருவர் தேவை. 15.02.2003 இற்கு முன் தகுதியானவர்,

இல.165, மானிப்பாய் வீதி.

என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.


## யாழ்ப்பாணம் - மாநகர சபை

### அரியாலைச் சந்தையை பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு வழங்குவதற்கான அறிவித்தல்

மேற்படி மாநகர எல்லைக்குள் உள்ள அரியாலைச் சந்தையை 15.02.2003 ஆம் திகதி முதல் 31.12.2003 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு நடாத்துவதற்காக எதிர்வரும் 14.02.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு மாநகரசபை அலுவலகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விடப்படும். கேள்வியில் சித்திபெறுவோர் அன்றைய தினமே அதன் அரைவாசித் தொகையையும் 20 % பெறுமதிசேர் வரியையும் சேர்த்து செலுத்தி உடன்படிக்கை செய்து கொள்ளல் வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஏலத்தில் பங்குபற்றி கேள்விகளைக் கேட்க விரும்புவோர் பிணைப் பணமாக ரூபா 2500/= ஐ சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

ஆகக்குறைந்த கேள்வித் தொகை ரூ 40,000/- ஆகும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

*மாநகர சபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2003.02.05.* (சி/568)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தினவெளியீடு

விஜய், ஸ்நேகா நடித்த

வசீகரா




10.30, 2.30, 6.00, 9.30 (சி-545)

ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

நிறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

சூர்யா, ஜோதிகா நடித்த

உயிரிலே கலந்தது

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி!

THE MUMMY RETURNS (சி-544)

உலகப் புகழ்பெற்ற L.G ஸ்தாபனத்தாரின்

இலத்திரனியல் பொருட்கள் தற்பொழுது யாழ்ப்பாணத்தில்....!

L.G குளிர்சாதனப் பெட்டிகள் (Refrigerator)
L.G சலவை இயந்திரம் (Washing Machine)
L.G குளிரூட்டி (Air conditioner)
L.G Colour TV 20", 21"
L.G Flatron Colour TV 21"
L.G Micro Wave Oven

மற்றும் மின் விசிறிகள், மின் அலங்கார விளக்குகள், கிறைண்டர் முதலான அனைத்து மின் உபகரணங்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

JAFFNA ELECTRICALS

06 (94), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ABANS LTD. இன் அங்கீகரிக்கப்பட்ட முகவர் T.P: 2353

# நம்பியாரின் ஆலோசனையை பெறுமாறு இந்தியாவின் அழுத்தம் இருந்ததா?

## வெளிநாட்டு ராஜதந்திரிகள் வெளியிடும் தகவல்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் அழுத்தம் காரணமாகவே சதீஸ் நம்பியாரை இலங்கையின் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைகளில் சம்பந்தப்படுத்த வேண்டியநிலை இலங்கை அரசுக்கு உருவாகியது என்று வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டில் தமது பாதுகாப்பு படைத்தரப்பினால் பிரகடனப் படுத்தப்பட்ட உயர் பாதுகாப்பு வலயத்தை தமக்கு வசதியாக மீள ஒழுங்குபடுத்துவது என்பது இலங்கை அரசைப் பொறுத்தவரை அதிகளவு சிரமமான விடயம் அல்ல என்றும் இவ்விடயத்தில் இந்திய இராணுவ அதிகாரியின் ஆலோசனை எந்த வகையிலும் தொழில்சார் திறன் வாய்ந்ததாக இருக்க முடியாது என்றும் மேற்படி இராஜதந்திரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, படையினருக்கான ஆலோசனை விவகாரத்தில் ஆலோசகர் மட்டத்தில் நம்பியாருடனான தொடர்பு இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்கனவே இருந்திருக்கலாம் என்றும் அந்த இராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

## அழகுராணி தூதுவராக நியமனம்

# விதிமுறைகள் மீறப்படவில்லை ரிரோன்- சந்திரிகாவுக்குப் பதில்

(கொழும்பு)

முன்னாள் அழகுராணி ரோஸி சேனநாயக்கவை மலேசியாவுக்கான தூதுவராக நியமித்தது தொடர்பாக- ஜனாதிபதி தெரிவித்த எதிர்ப்பு தேவையற்றது என்றும் - ராஜதந்திரிகள் அல்லாதோரை தூதுவர்களாக நியமிப்பதற்கான கோட்டா சரிவரப் பின்பற்றப்படுவதாகவும் கூறியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ.

இலங்கையின் வெளிவிவகாரச் சேவையில் தொழிற்திறமையுள்ளவர்களை நியமிப்பதில் தாம் மிகக் கவனமுடனேயே நடந்து கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக ரோஸி சேனநாயக்க தூதுவராக நியமிக்கப்பட்டது பற்றிக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - தொழிற்திறமையற்றவர்களை வெளிநாடுகளுக்குத் தூதுவர்களாக நியமிப்பது ஏற்புடையதல்ல எனக் கருத்துக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இளவாலையில் விபத்து மூன்றுபேர் படுகாயம்

இளவாலைப் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் அதே இடத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீதியிலே இரண்டு துவிச்சக்கர வண்டிகள் அருகருகாக வந்த வேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதினாலேயே இம் மூவரும் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இவ்விபத்தில் யோசப் கிருஷ்ணராஜா (வயது 31), மார்கப்பிள்ளை மேரி யோசப் நேசரெட்ணம் (வயது 51), கிருபாகரன் சத்தியசீலன் (வயது19) என்பவர்களே படுகாயமடைந்து, சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு- மேலதிக சிகிச்சைக்காக அம்புலனஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

(ரா)



சுதந்திர தினவிழா வைபவத்தின் முதல் நாள் ஒத்திகையின்போது, ஜனாதிபதிக்காக ஒத்திகைக்கு அனுப்பப்பட்ட தனுஷா என்ற பொலிஸ் கொன்ஸ்டபிளும் - அவருக்குப் பின்னே இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப்படைத்தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா மற்றும் பொலிஸ் மா அதிபர் ரி.ஆனந்தராசா ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## பிள்ளைகள் இயக்கத்தில் இருக்கிறார்களா?

# விபரம் திரட்டும் படையினர் துருவித்துருவி விசாரணை

(சரசாலை)

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீடு வீடாகச் சென்று விபரங்களைத் திரட்டிவரும் படையினர் - பிள்ளைகள் இயக்கத்தில் இருக்கின்றனரா எனப் பெற்றோர்களைத் துருவித்துருவி விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

மீள்குடியமர்ந்து வரும் மக்கள் தொடர்பாகக கடந்த சில மாதங்களாகக் குடாநாடு முழுவதும் விபரம் திரட்டும் பணியில் ஈடுபட்டுவரும் படையினர் - போராளி, மாவீரர்களின் விபரங்களைச் சேகரிக்கவே துருவித்துருவி விசாரித்து வருகின்றனர். இதனால் இந்தப் பகுதி மக்கள் மத்தியில் பதற்றம் நிலவி வருகின்றது.

குறிப்பாக கல்வயல் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலேயே படையினர் இந்த நடவடிக்கையில் முனைப்புடன் ஈடுபட்டுவருகின்றனர்.

அதேவேளை இந்தப் பகுதியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் பாரிய இராணுவ முகாம் அமைப்பதற்குத் திட்டமிட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

(34,ச)

## யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் வருடாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் இவ் வருடத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுநாள் 9 ஆம் திகதி காலை 10மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

லீக்கின் முன்னாள் தலைவர் எஸ்.ரி.கணநாதன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் உதைபந்தாட்ட லீக்கில் நீண்ட காலமாக சேவையாற்றியவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

# ஜே.வி.பியினருக்கு எதிராக எம்பிலிப்பிட்டியவில் பேரணி

எம்பிலிப்பிட்டிய நகரில் ஆயிரத்துக்கு மேலான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜே.வி.பியை எதிர்த்து ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள்.

அச்சம் நிலவிய காலப்பகுதியில் கிளர்ச்சி நடவடிக்கைகளுக்குப் பலியான கொலன்ன தேர்தல் தொகுதி வாசிகளின் குடும்பத்தவர்களும் இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டனர்.

இரத்தினபுரி நாடாளுமன்ற உறுப்பினர் பி.அபநாயக்க உட்பட பல முக்கியஸ்தர்களும் இப்பேரணியில் பங்குபற்றியிருந்தனர்.

# மீண்டும் யாழ்ப்பாணம் வரவுள்ள பிளாஸ்ரிக் சிகிச்சை நிபுணர்கள்

(யாழ்ப்பாணம்)

பிரித்தானியாவைச் சேர்ந்த பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர் குழுவொன்று எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

ஜேர்மனி உதவி மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வரவுள்ள பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர்கள், இங்கு எரிகாயங்கள் மற்றும் தழும்புகளால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

பிரித்தானியாவிலிருந்து முன்னரும் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர்கள் யாழ். வந்து, நூற்றுக்கணக்கானோருக்குச் சிகிச்சைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை - குமாரபுரம் படுகொலை 8 படையினர் மீது குற்றப்பத்திரிகை

## 18ஆம் திகதி திருமலை உயர் நீதிமன்றில் தாக்கல்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிளிவெட்டி - குமாரபுரம் படுகொலைகளில் சம்பந்தப்பட்ட படையினருக்கு எதிராக எதிர்வரும் 18 ஆம் திகதி திருகோணமலை உயர்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது.

1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி குமாரபுரம் கிராமத்தில் வைத்து 24 தமிழ்ப் பொதுமக்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். அத்துடன் பெண்ணொருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இப்படுகொலைகள் தொடர்பாக சாட்சிகளின் வாக்கு மூலங்கள் மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றுவந்தன. இதன்போது நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் எட்டு இராணுவத்தினர் அடையாளம் காட்டப்பட்டிருந்தனர்.

சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்ட எட்டுப் படையினருக்கும் எதிராகவே எதிர்வரும் 18 ஆம் திகதி திருமலை உயர்நீதிமன்றில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படவுள்ளன. அடையாளம் காட்டப்பட்ட எட்டுப் படையினில் ஒருவர் இறந்துவிட்டதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

# யாழ். உள்ளூராட்சி சபைகள் விசேட ஆணையாளர் பொறுப்பில்

## இம்மாத நடுப்பகுதியுடன் என்கிறார் பிரதித் தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டின் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் இம்மாத நடுப்பகுதியில் நிறைவடைவதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் நாயகம் எம்.சி.அருந்தவச்செல்வம் தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபை, சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய நகர சபைகளுக்கும் மற்றும் கரவெட்டி, பருத்தித்துறை, சங்கானை, மானிப்பாய், கோப்பாய், சுன்னாகம், வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, நல்லூர், சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளுக்கும் தேர்தல் 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி நடைபெற்றது.

நான்கு ஆண்டு பதவிக்காலம் இம்மாத நடுப்பகுதியுடன் முடிவுற்றவுடன் விசேட ஆணையாளர்கள் மூலம் சகல மன்றங்களும் பொறுப்பேற்கப்படும் என்று பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இதற்கான பணிப்புரையை விசேட வர்த்தமானி மூலம் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அறிவிப்பார் என தேர்தல் செயலகம் தெரிவிக்கின்றது.

இதன்படி - ஒரு மாநகரசபை, மூன்று நகரசபைகள், 12 பிரதேச சபைகளுக்கும் எதிர்வரும் ஜூன் மாதம் 25 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என பிரதித் தேர்தல் ஆணையாளர் அருந்தவச்செல்வம் மேலும் தெரிவித்தார்.



கொழும்பில் நேற்றுமுன்தினம் வெளிவிவகார அமைச்சு நோக்கி பேரணியாகச் சென்ற பிக்குகளை பொலிசார் தடுக்க முற்பட்டபோது ஏற்பட்ட வாக்குவாதத்தில்- பொலிஸ் அதிகாரியின் சட்டையை பிக்கு ஒருவர் பின்புறமாக பிடித்து இழுப்பதைப் படத்தில் காண ம்

## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

**இரண்டாவது அகவையில்** HAPPY BIRTHDAY



பெயர் : இ.ஹரிமனோகர்
முகவரி : மதீனா நகர், வவுனியா.

**மூன்றாவது அகவையில்**

பெயர் : த.கவிதன்
முகவரி : வெல்லிக்கம் தோட்டம், துன்னாலை வடக்கு.



**மூன்றாவது அகவையில்**



பெயர் : ந.அபிஷா
முகவரி : ஆலங்கட்டை, அல்வாய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

## நல்லூரில் சிறப்புச் சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று மாலை 5.30 மணிக்கு 'இந்து மதம் காட்டும் இறை தத்துவம்' எனும் பொருளில் கவிமாமணி காரை எம்.பி.அருளானந்தம் சிறப்புச் சொற் பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

## இளையோருக்கான ஆங்கில வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவால் இளையவர்க ளுக்கான ஆங்கில வகுப்புகள் இவ் வாரம் முதல் ஆரம்பிக்கப்படவிருக் கின்றன.

வாரத்தில் சனி, ஞாயிறு தினங் களில் மாலை நேரம் நடாத்தப்பட்ட விருக்கும் இவ்வகுப்பில் கற்க விரும் பும் இளையவர்கள் யாழ். மறைமா வட்ட இளைஞர் ஆணைக்குழு அலு வலகத்தில் பதிவு செய்யுமாறு அறி விக்கப்பட்டுள்ளது. (ச)

## வர்த்தகர் சங்க சம்மேளனக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங் களின் சம்மேளனத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு வணி கர் கழகப் பணிமனையில் தலைவர் மு.சுந்தரலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது. (116,ச)

## மனவெளி நிகழ்வில் அனுபவப் பகிர்வு

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடத்தும் மனவெளி நிகழ்வில், 'தாயகம்' சஞ்சிகை ஆசிரியர் க.தணி காசலம் தமது இலக்கிய அனுபவங் களைப் பகிர்ந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வு நாளை மறுநாள் ஞாயிற் றுக்கிழமை மாலை 4 மணிக்கு செம்பியன் செல்வன் தலைமையில் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

## நீரிழிவு நோய் DIABETES

பகுதி 12

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

(6) படுக்கை நோயாளிகள், பணவசதியுடையவராயின் இயன் மருத் துவரின் (PHYSIOTHERAPIST)ஆலோசனையுடன் அப்பியாசம் செய்யலாம். கால், கை நோய்ச் சிறப்பு மருத்துவரிடம் (CHIRO PODIST) ஆலோசனை பெறலாம்.

(7) காலில் உணர்ச்சி அற்றுப்போனவர்கள் காயம் ஏற்படுவதைத் தவிர்க்க (உறுத்தாத) காற்றோட்டச் சப்பாத்து (SANDELS) அணிய வேண்டும். அரிசியில் களைந்து சமையலறையில் போடப் படும் சிறு கற்கள், கடதாசித் தொகுதிகளிலிருந்து கழற்றி எறியப்படும் தையல்கம்பி (STAPLE) போன்றவையும் காலில் காயம் ஏற்படுத்தக் கூடியவை. எனவே, வீட்டினுள்ளும் சப்பாத்து அணியவேண்டும்.

(8) சிறிதளவு குளுக்கோஸ் அல்லது இனிப்புப் பொருளொன்றையும், சலரோகி அடையாள அட்டையையும் எப்பொழுதும் தம்முடன் வைத்திருக்க வேண்டும்.

(9) தலையில் பேன், பொடுகு போன்றவை இல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும். சொறிவதனால் புண் ஏற்படலாம் என உணர வேண்டும்.

(10) பற்சுகாதாரம் பேணுவதுடன் பல் வைத்தியரிடம் ஆண்டுக்கொரு தடவையாவது சென்று வாயையும், பற்களையும் சோதித்துக் கொள்ளவேண்டும். ஊசியினால் பல் குற்றக்கூடாது.

(11) கூரான கொம்புள்ள விலங்குகள், கடிக்கும் சுபாவமுடைய விலங்க்ளுடன் பழகுவதையும், உறுத்தத்தக்க நரம்புகள் விளிம் புகள் கொண்ட தேங்காய்ப் பாதியின் உறுத்தும் பகுதிகளை மழுக்காது துருவுவதையும், காயங்கள் ஏற்படுத்தத்தக்க இதர வேலைகளையும் தவிர்க்க வேண்டும்.

(12) அப்பியாசங்களை - அசைக்கும் அப்பியாசங்கள் (DYNAMIC EXERCISES), அசைக்கா அப்பியாசங்கள் (STATIC EXER CISES), உடல், உள அப்பியாசங்கள் (யோகாசனம்) (PSYCHO PHYSICAL EXERCISE) என மூன்றாக வகுக்கலாம். இவற்றுள், அசைக்கா அப்பியாசங்கள் தசைகளை விறைப்பு நிலையில் சிறிது நேரம் வைத்திருப்பதாகும். இது நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்றதன்று. வைத்தியரின் ஆலோசனைப்படி மற்றைய இரண்டு அப்பியாசங்களையும், வேக நடையையும் (BRISK WALK) மேற் கொள்ளலாம். யோகாசனம் உடலுக்கு மாத்திரமன்றி மனசுக்கும் சுகம் தருவதாகும்.

(13) இன்சுலின் ஏற்றுவதற்கு முறைப்படி தொற்று நீக்கிய ஊசி களை அல்லது பயன்படுத்தியதும் அழிக்கும் (DISPOSEABLE) ஊசிகளைப் பயன்படுத்த வேண்டும்.

(14) கண்ணினுள் மண், தூசி போன்ற புறபொருட்கள் (FOREIGN BODIES) வீழ்ந்தால் கண்ணைக் கசக்கக்கூடாது.

(15) இன்சுலின் ஏற்றுவதற்கு முறைப்படி தொற்று நீக்கிய ஊசி களை அல்லது பயன்படுத்தியதும் அழிக்கும் (DISPOSEABLE) ஊசிகளைப் பயன்படுத்த வேண்டும்.

(16) ஒரே இடத்தில் ஊசியை ஏற்றாது ஊசி ஏற்றும் இடத்தை அடிக்கடி மாற்றவேண்டும்.

(17) வைத்தியர் சிபார்சு செய்யும் உணவையே உண்ண வேண்டும். சிலர் வைத்தியர் கூறும் உணவுகளின் அளவைத் தவறாகப்புரிந்து, அதிகமாக உண்டு நோயை மிகுவிக்கின்றனர். (தொடரும்)



## நமது ஈழநாடு வழங்கும்




## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### பரிசுப் போட்டி

MEGA

முதற்பரிசு - 25,000

**"இரத்தினம் ஊர்தி சேவைத்தளம்"**

[இரத்தினகோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

32, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களும் நவீன இயந்திரங்களினால் சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.

இரண்டாம் பரிசு - 15,000

மூன்றாம் பரிசு - 10,000



வழங்குவோர்: **சந்தியா மல்ரிகோட்யாட்**

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
பிரதான வீதி, பண்டத்தரிப்பு
Fancy goods, gift items, fevicryl & acron paint items.



**இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்! வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!**



## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

### வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயக னாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------------
வயது: ------------------------------
முகவரி: ------------------------------
------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்ட சாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*



# தாய் - சேய் பாசப்பிணைப்பை உருவாக்கும் தாய்ப்பால்!

**தாய்ப்பாலூட்டலின் அவசியம், அதன் முக்கியத்துவம் என்பன பற்றி விளக்குகின்றார் குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி மல்லிகாதேவி ஜீவரட்ணம்.**



குழந்தையொன்றுக்கு வழங்கப்படக்கூடிய அதிசிறப்பான போஷாக்கு தாய்ப்பாலாகும். போஷாக்கு காரணங்களுக்காக மட்டுமல்லாமல் குழந்தையின் தேக, மன, உணர்ச்சிபூர்வமான வளர்ச்சிக்கும் தாய்ப்பாலூட்டுதல் மேலானதாகும். தாய்க்கு ஆரோக்கியம், சௌக்கியம், உணர்வு பூர்வமான நிறைவு ஆகிய அம்சங்களில் தாய்ப்பாலூட்டுதல் பயனுடையதாகும். செயற்கை முறையில் தாய்ப்பாலுக்கு சமமான ஒன்றை உருவாக்க எவ்வளவு முயன்றாலும் தாய்ப்பாலே தலைசிறந்த பாலாக விளங்குகிறது. குழந்தையின் ஆரோக்கியத்தையும் வளர்ச்சியையும் அதன் முதல் வருட ஆயுட் காலத்தில் நிர்ணயிக்கும் பிரதான அம்சம் தாய்ப்பாலூட்டுதலே.

தாய்ப்பால் ஊட்டி வளர்க்கப்படும் குழந்தைகள் மற்றைய உணவு (புட்டிப்பால்) ஊட்டப்படும் குழந்தைகளிலும் பார்க்க நோய்வாய்ப்படுவதும், போஷாக்கின்மையால் பாதிக்கப்படுவதும் குறைவு.

பிறந்த குழந்தையொன்றுக்கு பாலூட்டும் பொழுது பின்பற்ற வேண்டிய சில விதிமுறைகளை உரிய முறையில் பின்பற்றப்படுமாயின், குழந்தை திருப்திகரமான முறையில் விருத்தியடையும் . சில தாயமார்களுக்கு பாலூட்டும் பொழுது சில பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு. அவ்வாறான தாய்மார்கள், சிறுவர் நிபுணத்துவ வைத்தியர்களைச் சந்தித்து அவரது சேவையைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

மூலதத்துவங்களாவன:-

1. திருப்திகரமான பாலூட்டுதலுக்குத் தடையாகக் கூடியவகையில் பிரச்சினையொன்றும் முலைக் காம்புகளில் இல்லை என கர்ப்ப காலப் பகுதியில் நிச்சயப்படுத்திக் கொள்ளல்.

2.குழந்தை பிறந்தவுடன் அதன் வாயை மார்பகத்தோடு தொட வைத்தல் வேண்டும். இதைத் தாயினால் செய்ய முடியாதபடியால் தாதி அல்லது பெண்கவனிப்பாளரினால் மார்பகத்தை நன்றாகத் துப்பரவு செய்து குழந்தையின் வாயை முலைக்காம்பில் வைத்தல்வேண்டும்.

3. பிரசவத்தை அடுத்து சில தினங்களில் சுரக்கும் தாய்ப்பால் தடித்த மஞ்சள் நிறத்தையுடையதாக இருக்கும். "கொலஸ்ரம்" அல்லது கடும்புப்பால் என அழைக்கப்படும். இக் கொலஸ்ரம் குழந்தைக்கு மிக மிக நல்லது. பொதுவான தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது.

16 முதல் 24 வாரங்களினுள் தாய்ப்பால் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும். குழந்தை பாலின் பொருட்டு அழும்போதெல்லாம் பாலூட்டல் வேண்டும். இக்காலத்தில் மல்லித்தண்ணீர், பழச்சாறு, நீர் குளுக்கோஸ் தண்ணீர் என்பவற்றைக் கொடுக்கக் கூடாது.



குழந்தையின் எடையை மாதம் ஒரு முறை நிறுத்துப்பார்த்து அதை வளர்ச்சிப் பதிவேட்டில் குறித்துக் கொள்ளுதல் வேண்டும்.

தாயின் கர்ப்பகாலத்தில் போஷாகதில் கவனம் செலுத்தப்பட்டிருப்பின் குழந்தைக்கு தாய்ப்பால் மட்டும் போதுமானதாகும்.

*தாய்ப்பாலின் குணவியல்புகள்*

குழந்தைக்குச் சக்தியையும் போஷாக்கையும் வழங்கச் சரியான அளவிலும், சரியான விகிதாசாரத்திலும் உணவுக் கூறுகள் தாய்ப்பாலில் உள்ளது. குழந்தைக்கென்றே உற்பத்தி ஆகின்றது, தயாரித்த நிலையிலுள்ளது, செலவற்றது, தொற்று இல்லாத நிலையிலுள்ளது, குழந்தையின் செயற்பாட்டுக்கு மிகவும் உகந்த நிலையிலுள்ளது, தகுந்த உஷ்ண நிலையிலுள்ளது தாய்ப்பால். முதல் இரண்டு நாட்களில் 'கொலஸ்ரம்' என்னும் ஒரு மஞ்சள் நிற தடித்த பால் சுரக்கப்படுகிறது. இது பாலிலும் பார்க்க கூடியளவு புரதமும், குறைந்தளவு கொழுப்பும், காபோவைதரேற்றும் உண்டு. இப் பாலை கடும்புப்பால் என்பர். இப் பாலைக் கட்டாயம் குழந்தைக்கு ஊட்ட வேண்டும். இது தொற்று நோய்களைத் தடுக்கக் கூடிய, நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது. தாய்க்கும் குழந்தைக்கும் பாசப்பிணைப்பினை உருவாக்கும். தாய் சேய் அன்பு ஏற்படுகிறது.

*தாய்ப்பாலூட்டுவதால் தாய்க்கு வரும் நன்மைகள்*

பொருளாதாரம் குன்றிய நிலையிலும் தாய்பால் கொடுக்கக் கூடியதாக உள்ளது. குறிப்பாக தாயின் கருப்பை சுருங்க உதவி செய்கிறது. தாய்க்கு மார்புப் புற்றுநோய் வரும் நிலை குறைவுறும், தாய் சேய் பாசம், அன்பு ஏற்படுகிறது. குடும்பத் திட்டத்திற்கு உதவியாக இருக்கிறது.

*தாய்ப்பாலூட்டும் முறை*

தாயின் மார்பகங்களிலிருந்து பாலை பருகுவதற்கு மார்பகத்தின் ஒரு பகுதியை வாயினுள் எடுத்துக் கொள்ள வேண்டும். குழந்தை முலைக காம்புடன் அதைச் சுற்றியிருக்கும் கருமைநிறப் பகுதியையும்தன் வாயினுள் இழுத்துக் கொள்கிறது. குழந்தை நாவினால் மார்பகங்களை அமத்தி வாயினுள் பாலை உறுஞ்சி எடுக்கும்.

இரவிலும் பகலிலும் குழந்தைக்கு அடிக்கடி பாலூட்டுதல் வேண்டும். தாய் மன அமைதியுடனும், நல்லெண்ணத்துடனும் அமர்ந்து பாலைக் கொடுக்க வேண்டும். குழந்தையும் சரியான நிலையில் இருந்து முலையைச் சூப்புவது மிக முக்கியம்.

சரியான நிலையில் இருந்து குழந்தை முலையைச் சூப்புகிறது என்பன காட்டும் அறிகுறிகள்:-

1. குழந்தையின் உடல் முழுவதும் தாயின் பக்கம் திரும்பியிருக்கும்.

2. குழந்தை நீண்ட நேரம் பலமாக உறுஞ்சும்.

3. குழந்தை ஓய்வாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படும்.

4. தாயின் முலைக்காம்பில் நோவிருக்காது.

பால் கொடுத்தபின் மார்பகங்களை வெறுமையாக்க வேண்டும் (பாலை எடுத்து). அப்போது பால் அதிகளவு சுரக்க வாய்ப்புண்டு. பாலூட்டும் காலங்களில் தாயானவள் நல்ல உணவு உண்ண வேண்டும். நிறைய பசுப்பாலும், பானமும் பருக வேணடும். ஓய்வு எடுக்க வேண்டும். மார்பகங்களைச் சரியாகப் பேன வேண்டும். பாலூட்ட முன்பு பானங்கள் அருந்திய பின் பாலைக் கொடுக்கவேண்டும். மார்புச் சுத்தம் பேணப்படவேண்டும்.

## அன்பின் சிந்திக்கு

### மனந் திறக்கும் ஒரு மடல்





சிந்தி,

நேற்று வீதியிலே எனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தேன். கண்மண் தெரியாமல் வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்த பையனொருவன் திடீரென வாகனத்தைத் திருப்பி வந்த பாதை வழியே செல்ல ஆரம்பித்தான். அவன் வீதியின் குறுக்கே திடீரென திரும்பியதனால் எனது கணவர் தடுமாற நேர்ந்து விட்டது.

அடுத்து இரண்டு பெண் பிள்ளைகள் சைக்கிளில் அருகருகாகச் சென்று கொண்டிருந்தனர். அதைக்கண்டதுமே அவர் "இந்தப் பெண்பிள்ளைகளே இப்படித்தான். அவர்களுக்குக் கதைதான் முக்கியம்" என்று ஏதேதோ கூறிக்கொண்டு இருக்கும்போதே ஒரு மோட்டார் சைக்களில் வந்த பையனின் தோழில் கைவைத்தவாறே, சைக்களில் வந்தவன் எம்மை முந்திக் கொண்டு சென்றான். அதைப்பார்த்துக் கொண்டே பெண்கள் சைக்கிள் ஓடுவது பற்றியே எனது கணவர் தொடர்ந்து பேசிக்கொண்டு வந்தார்.

சிந்தி, ஏன் இப்படி? இத்தகைய தவறுகள் கூட பெண்கள் செய்தால் பெருந்தவறாகக் கருதப்பட்டு கடும் விமர்சனத்திற்கு உள்ளாகிறது. அதைவிடப் பெரிய தவறை ஆண்கள் செய்தால் அது சிறு தவறு போன்று தென்படுகிறது.

இதன் காரணம் எங்கள் அடிமனங்களில் இவையெல்லாம் பெண்கள் செய்யக்கூடாதவை என்று ஒரு நீண்ட பட்டியல் பதிந்து கிடக்கிறது. அவற்றில் எதைச்செய்தாலும் ஒரு பெருந்தவறு செய்யப்பட்டதாகவே அவர்கள் கருதுகின்றனர்.

வீதியோரத்தில் பெண்பிள்ளைகள் கலகலப்பாக சிரித்து உரையாடிக்கொண்டு சென்றால் போதும் அதற்கே பெரிய தவறொன்று செய்யப்பட்டு விட்டது போன்று குறைகூறத் தொடங்கி விடுவார்கள்.

எனது தாயார் ஏதோ நோயுற்று இருந்தவேளை, அவரை செருப்புப்போட்டு வீட்டினுள் உலாவுமாறு வைத்தியர் ஆலோசனை கூறியிருந்தார். அதனால் வீட்டிற்குள்ளும் ஒரு செருப்பை அம்மா உபயோகித்தார். இச்செருப்புக்கள் வீட்டிற்குள் மட்டும் உபயோகிக்கப்பட்ட போதிலும் எனது பாட்டியால் அதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவர் வருவோர் போவோரிடமெல்லாம் இதைப்பற்றியே குறைகூறிக்கொண்டு இருந்தது எனக்கு நினைவு வருகின்றது.

அப்படித்தான் பெண்கள் செய்யும் பலவற்றை இவர்கள் செய்யத்தகாததாகக் கருதுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும்.

பெண்களும் மனிதர்களே, மனிதர்களுக்குரிய உரிமையெல்லாம் அவர்களுக்குண்டு.

கண்தெரியாதவனைப் பார்க்க வைக்கவும், காலிழந்தவனை நடக்க வைக்கவும் இவ்வாறே பல்வேறு உறுப்புக்களை இழந்தவர்களுக்கும் அந்தக் குறையில்லாது செய்ய நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மூலம் முயலும் இக்காலத்தில் பெண்கள் செய்யக்கூடியவற்றை செய்யக்கூடாதென்று தடுத்து வைப்பது எவ்வளவு தவறானது?

"நாம் எதையும் தடுக்கவில்லையே" எனக்கூறிக்கொண்டாலும் செய்வது தவறு எனக்கூறுவதும், ஏளனஞ் செய்வதும் கூட இன்றும் அந்தப் பழைய எண்ணங்களின் பிடியிலிருந்து நாம் விடுபடவில்லையென்பதையே காட்டுகிறது.

வழிவழி வந்த வழமைகளை மாற்றி புதியதொரு பழக்கத்தைக் கடைப்பிடிப்பது கஷ்டமான ஒன்றுதான். அதற்காகப் புதுமைகளை அடியோடு கைப்பற்ற மறுக்கமுடியுமா என்ன?

நம்முன் நிற்கும் பாரிய பிரச்சினை இந்த மனமாற்றம்தான். இதனை ஏற்படுத்த நாமனைவரும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும். பலவகையான திட்டமிட்ட செயற்பாடுகள் மூலமே இதனை ஏற்படுத்தலாம்.

அன்புடன்,
யோசி.

# கவிதைச் சோலை

## அன்பின் உறைவிடம்

கருவில் நான் உருவான
நாள் முதல்
கண்ணின் மணிபோல்
காத்து வளர்த்த அன்னையே
கருவறையில் நான் காலால்
எட்டி உதைக்கும் போது - பட்ட
கஷ்டமெல்லாம் மறந்து
சிரித்தவள் அன்னையே.

உயிருக்குள் உயிர்
வளர்த்து - ஓர் உயிரைச்
சுமக்கும் பூக்கூடையாகி
மணத்தோடு உரையாடி
விட்டு என் முகவரியை
உலகிற்கு காட்டியவள்
அன்னையே.

பூமகள் என்னைத்
தாங்கும் போது
பூவாய் உன்முகம்
மலர்ந்திட
புது உலகம் - என்னை
அழவைத்த போது
பூப்போன்ற என்மேனியை
வாஞ்சையுடன் வருடினாயே.

அன்பின் ஊற்றான அன்னையே
பாலூட்டும்போது புகட்டுகிறாய் மௌனமொழி
தாலாட்டும் போது தமிழ்மொழி விதைக்கிறாள்.
தடுக்கில் நான் தடுக்கிவிழாமல்
தாங்கி என்னை அரவணைத்து
அவனியில் காலடி வைத்திட
வழி செய்தவள் அன்னையே.

தாயின் கனிவான
பாசத்தைத் தரிசித்துப்பார்
புனிதத்தின் உண்மை புரியும்.
பாசம் என்னும் வாசம் தேவையா?
தாய் என்னும் சுவாசத்தில்
உன் சுவாசத்தை எழுதி
அது தானாக வரும்.



அன்னையே
உன் உயிரின்
ஒரு துளியால்
எம்மை உருவாக்கிய
உன்னைப் போற்ற
அன்னை எனும் பாலில்
அன்பு எனும் தேன்
கலந்து - தாயே
உன்னைப் போற்றுவோம்.

பிரியா

## மௌனப் பூ



நிஜயமாயிருக்கிற பொய்
என் மீதான உன் காதல்
பொய்யாயிருக்கிற நிஜம்
உன் மீதான என் காதல்...
புரிந்தது போலவும்
புரியாதது போலவும்
காட்டிக் கொள்கிற
உன் குழந்தைத் தனத்தில்
குழம்பிக் கிடக்கிறேன்
எதையும்
உறுதிசெய்துவிட
முடியாத படிக்கு
உறுத்துகிறது உன் மௌனம்..
எப்போதேனும்
சம்பவிக்கிற
வார்த்தைகளற்ற பொழுதுகளில்
முகிழ்க்கிற மௌனப் பூவில்
மின்னலென
புன்னகைக்கிறது
நமக்குள்ளான
காதல் முகம்.

- *இதயா*

## எப்போது வருகிறாய்?

எனது மௌனத்தை
மொழி பெயர்த்துவிட்டு
நீ மௌனமாயிருப்பதேன்?
உடைத்துப் பார்த்துவிட்டு
உதாசீனம் செய்வதற்கு
இது ஒன்றும்
கல்லல்ல மனது.
உன் நினைவுகளால்
என் கனவுகளெல்லாம்
கவிதைகளாகவே கன்னி கட்டியிருக்கின்றன.
உன் தரிசனத்தின் பின்தான்
தாம் புஷ்பிக்கப்போவதாக
அறிக்கை விட்டிருக்கின்றன.
நீ எப்போது வருகிறாய்?
நீ வந்து போனபின்தான்
என் கவி அகலிகை
விமோசனம் பெற இருக்கின்றாள்
நீ பார்க்கிற
பூக்களையெல்லாம்
என் முகமாகவே
நினைத்துக்கொள்.
அவற்றில் தெரிகிற
பனித்துளிகளை எல்லாம்
என் கண்ணீர்த் துளிகளென்றே
கருதிக்கொள்.
எப்போது வருகிறாய்
அல்லது உன் சேதிகளைச் சொல்லி
ஒரு சோடி
வண்ணத்துப் பூச்சிகளையாவது
அனுப்பி வைக்கிறாயா?

- *மசூறா ஏ.மஜீட்*

# சரீர மாற்றங்கள் இயல்பானவை...

## வாழ்வில் வளர்ச்சி நிலைகள் அறிதலும் புரிந்து கொள்வதும்

## இயற்கையானவை...

*சென்றவாரத் தொடர்ச்சி...*

இந்த அடையாளங்களைக் கண்டதும் பெற்றோர் விழிப்பாயிருக்கவேண்டும். பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்து ஆயத்தமாக்க வேண்டும். ஆயத்தப்படுத்த வில்லையேல் இந்த நிலையைக் கண்டதும் பிள்ளை பயப் படக்கூடும். எவ்வளவுதான் இதைப்பற்றிய அறிவிருந்த போதும் பலர் இதைப்பற்றி அனுபவம் கிடைத்தவுடன் பயப்படக்கூடும்.

சில பெண் பிள்ளைகள் பயத்தில் இதைப் பெற்றோருக் குக் கூறாது மறைத்துவிட்ட சந்தர்ப்பங்களுண்டு. ஒரு பெண் பிள்ளை தனது பிரச்சினையை முன்கொண்டு என் னிடம் ஆலோசனைபெற வந்தார். அப்பிள்ளையுடன் கலந் துரையாடிய போது தனது அனுபவத்தைக் கூறினார். "நான் பூப்படைந்து நான்காவது மாதவிடாய் வந்தபின்பே பெற் றோரிடம் கூறினேன். பெற்றோர் நான்காவது மாதவிடாய் வந்த நிகழ்ச்சியை முதலாவது என எண்ணிக் கொண் டாடினார்கள்" என்று கூறினாள். அவள் பெற்றோருக்குக் கூறவில்லை. காரணம் இப்படிப்பட்ட விடயங்களில் பெற் றோருடன் நல்ல விதத்தில் கலந்துரையாடக்கூடிய சூழல் இல்லாதிருப்பதேயாகும். பாலுறுப்புப் பற்றி பெற்றோர் இந்த வயதில் பிள்ளைகளுடன் கலந்துரையாடுவதில்லை. சில பெற்றோர் பாலுறுப்புப் பற்றி மட்டுமல்ல எந்த விடயத்திலும் கலந்துரையாடுவதில்லை. ஆகவே இப்படிப்பட்ட அனுபவத் தில் பிள்ளைகள் அறிவைப் பெற்றிருந்தாலும் பயப்ப டக்கூடும்.

இப்படிப்பட்ட அனுபவத்திற்குள்ளாகும்போது எமது கலாசாரத்தில் பிள்ளைகள் பெற்றோருடன் இந்த அனுபவத் தைப் பகிர்வது குறைவு. கேட்க யாருமில்லை. அதனால் பெரும்பாலும் சமவய்திலுள்ள நண்பர்களுடன் இதைப் பற்றிக் கேட்கக் கூடும் . சமவயதுள்ள நண்பர்களுக்கும் இது பற்றிய அறிவு இருப்பதில்லை. தனக்குச் சரியான அறிவு இதைப்பற்றி இல்லை என்று கூறவும் விருப்பமில்லை. அதனால் மூடக்கருத்துக்களை வெளிப்படுத துவர். ஆனால், பூபபடைந்த ஆண்பிள்ளை பயப்படக்கூடும். சில நண்பர் பயப் படுத்துவர். இப்படி அடிக்கடி நிகழ்ந்தால் மெலிந்துவிடுவாய். முகம் சுருங்கிப் போகும். கசரோகம் வரும் என்று பலவிதமாகக் கூறிப்பயப்படுத்துவர். இதில் விஞ்ஞான உண்மை இருக்காது. இருந்தாலும் பூப்படைந்த பிள்ளை உண்மையானாலும் பொய்யா னாலும் பயப்படக்கூடும்.

ஆகவே பெற்றோர் சரியான அறிவைப் பிள்ளைக ளுக்குக் கொடுக்க வேண்



டும். இது இயற்கையானது. கலவரப்பட வேண்டிய அவசியமில்லை என்று கூற வேண்டும். பாலு றுப்புப் பற்றிய அறிவைப் பெற்றோர் சந்தர்ப்பத்திற் கேற்பவே கூற வேண்டும். ஏதாவது நிகழ்ச்சி ஏற்படும்போது கூறலாம். உதாரணமாக மகனின் குரல் மாறுகிறது என வைத்துக் கொள்வோம். இதை வைத்துச் சிரிக்காது இதை முன்கொண்டு மகனுக்குச் சொல்லிக்கொடுக்கலாம். மகன் குரல் மட்டுமல்ல சரீரத்திலே இன்னும் பல மாற்றங்கள் ஏற்படலாம். இன்னும் சில காலத்தில் இப்படிப்பட்ட நிகழ் வுகள் ஏற்படலாம் என்று சந்தர்ப்பத்திற்கேற்பவே கூற வேண்டும்.

சரீர மாற்றங்களால் பிள்ளையின் மனதிலும் தாக்கம் ஏற்படும். நான் மற்றவரைவிட உயர்ந்தவர் என்று சில வேளைகளில் நினைப்பர். எல்லாம் என்னால் முடியும் என நினைப்பர். ஆனால் அதே பிள்ளை மறுநாள் அதை விடக் கீழ்ப்பட்ட தாழ்ந்த உணர்வுக்கு உள்ளாகலாம். தனது நடவடிக்கையைப் பற்றித் தாழ்வான எண்ணம் ஏற்படலாம். அதாவது ஒருநேரம் உயர்ந்தவர் என்ற உணர் வும், மறுகணம் தாழ்ந்தவர் என்ற உணர்வும் ஏற்படும். இது இந்த வயதில் உள்ள பிள்ளைகளுக்கு வருவது இயற்கையே.

சில நேரங்களில் பெற்றோரை நெருங்குவர். அவர் களுடன் சேர்ந்திருப்பர். பெற்றோர் சொல்வதைக் கேட்க விரும்புவர். சில நேரங்களில் பெற்றோரைப் புறக்கணிக்க அவர்களுக்கு எதிராகச் செயற்பட எண்ணுவர். இப்படி மனதில் மாறும் என்று பிள்ளைகள் அறிவதில்லை. அதனால் பெற்றோராகிய நாம் பிள்ளைகள் இந்த வயதில் எமது மனதில் புண்படும் வார்த்தைகளைக் கூறி விட்டதே என்று கவலைப்படாது பிள்ளைகளின் மனதைப் புரிந் துகொள்வது முக்கியம். அடிக்கடி மாறுபட்ட நிலையில் செயற்படும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

*அடுத்த வாரம் தொடரும்...*

எஸ்.ஜே.யோகராசா,
உளவளத்துணை ஆலோசகர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
மக்களே போல்வர் கயவர் அவர்அன்ன
ஒப்பார் யாம்கண்டது இல்.
- திருக்குறள்.

## நமது நோக்கு

### எதற்கு வந்தார்....?

பாதுகாப்பு வலய விவகாரத்தில் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் லெப்ரினன்ட் ஜெனரல் சதீஸ் நம்பியாரின் யாழ்.விஜயம் - அது நடைபெறமுதல் மக்கள் மத்தியில் கிளப்பியிருந்த எதிர்பார்ப்புக்களுடன் எவ்விதத்திலும் சமரசம் செய்யாமல் - அவர் தனது முந்திய நிலைப்பாட்டினையே வேறு பாணியில் வலியுறுத்திவிட்டுச் சென்றதாக முடிவடைந்திருக்கிறது.

யாழ்.செயலகத்தில் சதீஸ் நம்பியாருடனான சந்திப்பில் - யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், உயர் பாதுகாப்பு வலய விவகாரம் மக்களது மீள்குடியமர்வையும், சுமுகவாழ்வையும் எவ்வெவ்விதங்களில் பாதிக்கின்றதென்பதை பல்வேறு கோணங்களினூடாக, மிகத் தெளிவாக எடுத்துரைத்தனர்.

இது மக்களின் பிரச்சினை - மனிதாபிமான அடிப்படையில் இதற்குத் தீர்வுகாணப்படவேண்டும் என - பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழுத்தமாகக் கூறியிருந்தனர்.

யாழ்.குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் - அது கையகப்படுத்தியுள்ள ஒவ்வொரு பகுதியையும் பாதித்து வருகின்றது என்பது பற்றி - விரிவான விளக்கங்கள், மிகக் குறுகிய நேரத்தில் அளிக்கப்பட்டன.

இவை யாவற்றையும் செவிமடுப்பவர் எவராக இருந்தாலும் - அல்லது - இப்பிரச்சினை பற்றி இதுவரை அறியாதவர் எவராக இருந்தாலும்கூட - உயர் பாதுகாப்பு வலயம் விளைவித்துள்ள பாதிப்புக்களின் ஆழ, அகலங்கள் - அவருக்குத் தெளிவாகப் புரிந்துகொள்ளும்படியான சந்திப்பாக நேற்றுமுன்தினத்தைய கலந்துரையாடல் இருந்தது.

ஆனால், இவையெல்லாம் யாருக்குச் சென்றடைய வேண்டுமோ - அந்தப் பிரமுகர் - தான் ஏற்கனவே கொண்டிருந்த அல்லது தயாரித்துவிட்ட முற்கற்பிதங்களுடன் இருந்தது, கலந்துரையாடலின் இறுதியில் அவர் ஆற்றிய உரையில் தெளிவாகத் தெரிந்தது.

லெப்ரிணன்ட் ஜெனரல் சதீஸ் நம்பியார், தான் எவ்வாறு உயர் பாதுகாப்பு வலயத்தைப் பார்க்கின்றார் என்பதைச் சொல்வதற்கு - தனது முதற்கட்ட அறிக்கையின் அடிப்படையில் அமைந்த நிலைப்பாட்டை வலியுறுத்துவதற்கு - அவரது சுருக்கமான பதிலுரையே போதுமானதாக அமைந்தது.

உயர் பாதுகாப்பு வலய விவகாரத்தை மூன்று பரிமாணங்களினூடாக நோக்கலாம் எனக் குறிப்பிட்டு, அவற்றை அவர் சொல்லியபோதே, அதனை - அவர், மக்களின் பிரச்சினையாகப் பார்க்கக்கூடிய மனநிலையில் இல்லை என்பது தெளிவானது.

இந்தப் பரிமாணங்களை அவர் விளக்கியபோது - உயர் பாதுகாப்பு வலய விவகாரத்துடன் எவ்வித தொடர்பும் அற்ற அரசியல் பரிமாணத்தினை அவர் முதன்மையாகக் குறிப்பிட்டார்.

உயர் பாதுகாப்பு வலயத்தை, அரசியலாக்க அவர் முனைந்ததன் உள்ளார்த்தம் - அவர் அல்லது அவர் சார்ந்திருக்கும் நாடு - தனது நோக்கில் இப்பிரச்சினையை எவ்வாறு பார்க்கின்றது என்பதைத் தெளிவுபடுத்தியது.

தனது உரையில் - தானொரு சாதாரணன், இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாகவோ, பேச்சாளனாகவோ தான் வரவில்லை என்பதை முதலில் சொல்லிவிட்டு - பின்னர் உயர் பாதுகாப்பு வலயம் அரசியல் பரிமாணமுடையது என முதன்மைப்படுத்தியதன் மூலம் - இந்தியா எவ்விதம் இப்பிரச்சினையைக் கையாள விரும்புகின்றது என்பதை அவரே சொல்லவேண்டிவந்த நிலையை அவதானிக்க முடிந்தது.

தற்போதும்கூட, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை தனது நாட்டுக்கு அழைத்த இந்தியா - உயர் பாதுகாப்பு வலயத்தில் விட்டுக்கொடுப்புக்களை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளக்கூடாதெனக் கூறியுள்ளதாக செய்திகள் வெளிவரும் நிலையில் - இந்த விவகாரத்தை அரசியல்மயப்படுத்தும் தோற்றத்தை, இந்தியா உருவாக்கிவரும் சூழலில் - அந்த நாட்டின் கூட்டுப்படை கல்வி நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பிலுள்ள நம்பியாரும் அதனையே வழிமொழிந்ததில் வியப்பேதுமில்லை என்றே கூறலாம்.

இந்நிலையில் -அரசியல் பரிமாணம் பற்றித் தான் கவனம் செலுத்தப் போவதில்லை என அவர் கூறியதுதான் நகைப்புக்கிடமாக - கேட்போரை முட்டாளாக்கும் மனப்பாங்குடையதாக இருந்தது.

மனிதாபிமானப் பரிமாணத்தையும் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்த அவர் - உங்கள் தரப்புக்கு இது சரியானது எனக் கூறியதன் மூலம் - மக்கள் பிரச்சினையைத் தவிர்க்கும் நோக்கமே அவரிடம் இருந்ததை அறியமுடிந்தது.

அதேவேளை - இறுதியாக ப்ாதுகாப்பு சம்பந்தமான பரிமாணம் பற்றி அவர் பயன்படுத்திய வார்த்தைகளும் - சொல்லிய முறைமையும், இம்மூன்று பரிமாணங்களுள் - அரசியலோடு, பாதுகாப்பும் முதன்மை பெறுவதை அவர் வெளிப்படுத்தியதாகவே அமைந்தன.

'எனது பார்வையில் - மூன்றாவது பரிமாணத்தை நீங்கள் அலட்சியப்படுத்தக்கூடாது என்றே நான் கோருகின்றேன். நாம் இதை முழுமையாக ஒதுக்கிவிடமுடியாது. இதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்' என வலியுறுத்திய அவர் -

'இதை அலட்சியப்படுத்தினால் அமைதி முயற்சிகள் ஆபத்துக்குள்ளாகும்' என்று எச்சரிக்கையும் வேறு விடுத்தார்.

இதன் வழியே - நம்பியார் தான் செய்ய முனைவதை, சொல்லப்போகும் ஆலோசனைகளின் இறுதி வடிவத்தின் தளத்தை யாழ்.செயலகத்தில் வெளிப்படுத்திவிட்டுச் சென்றிருக்கிறார்.

அவ்வாறெனில் - நம்பியார் பொது அமைப்புக்களுடன் நடத்திய சந்திப்பு என்பது - அவர் குறிப்பிட்டது போலவே 'அரசாங்கம் கேட்டுக்கொண்டதன் பேரில்' நடந்த விடயமே தவிர, அவர் ஏற்கனவே தீர்மானித்துவிட்ட முற்கற்பிதங்களில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை என்பதையே தெளிவாக்கிவிட்டிருக்கிறது.

---

## போராளிகள், மாவீரர்களின் பெற்றோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

## மட்டு. கூட்டத்தின்போது ஆராய்வு!

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெற்றோர்கள், போராளிகளின் பெற்றோர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நேற்று முன்தினம் மட்டக்களப்பில் ஆராயப்பட்டது.



பளுகாமம் கூட்டத்தில் பெற்றோருடன் கலந்துரையாடும் தளபதி நாகேஸை முதலாவது படத்திலும், தளபதி ரமேஷை இரண்டாவது படத்திலும், மாவட்ட அரசியற் பொறுப்பாளர் கௌசல்யனை மூன்றாவது படத்திலும் காணலாம்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு பளுகாமம் கண்டுமணி மத்திய மகாவித்தியாலத்தில் இது தொடர்பான கூட்டம் நடைபெற்றது.

மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் கிருஷன் மற்றும் தளபதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். இந்தச் சந்திப்பில் மாவீரர்கள், போராளிகளின் பெற்றோர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்தும் ஆராயப்பட்டது. இந்நிகழ்வில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பெற்றோர் கலந்து கொண்டிருந்தனர்.(6)

## லஞ்ச ஆணையாளருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

### 65 எம்.பிக்கள் ஆதரவு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவுகோரி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையொப்பம் பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அமைச்சர்களான இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், றோகித போகொல்லாகம ஆகியோர் ஆதரவு தெரிவிக்க மறுப்பு தெரிவித்து வருகின்றனர்.

ஏற்கனவே 65 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக ஒப்பமிட்டுள்ளனர். இதற்குள் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்குவர். (01)

## நிலத்தைக் கொத்தியபோது மர்மப் பொருள் வெடித்தது!

### கெருடாவில் சம்பவத்தில் இளைஞர் காயம்

மீளக்குடியேறுவதற்காக வீட்டுக்காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்த இளைஞர் ஒருவர் மர்மப்பொருள் வெடித்து காயமடைந்தார்.

இச்சம்பவம் சாவகச்சேரி - கெருடாவிலில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்றது. இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

மீளக்குடியேறுவதற்காக வீட்டைத் துப்புரவு செய்து கொண்டிருந்த இளைஞர், நிலத்தை மண்வெட்டியால் கொத்தியபோது மர்மப்பொருள் வெடித்தது. இதனால் சிவசுப்பிரமணியம் பகீரதன் (வயது 24) என்ற இளைஞர் முகம், கைகள் ஆகிய பகுதிகளில் காயமுற்ற நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (34)

## யாழ். போதனா வைத்தியசாலையில்

## நிரந்தர சட்ட வைத்திய அதிகாரி இல்லை; உரிய நேரத்தில் சேவை பெறமுடியாத நிலை!

யாழ்.போதனா மருத்துவமனையில் நிரந்தர சட்ட வைத்திய அதிகாரி எவரும் சேவையில் இல்லை. இதனால் பொது மக்கள் சட்ட வைத்திய அதிகாரிகளின் சேவையைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது சாதாரண மருத்துவ அதிகாரி ஒருவரும் ஓய்வு பெற்று சேவை நீடிப்பு வழங்கப்பட்ட சட்ட வைத்திய அதிகாரி ஒருவருமே கடமையாற்றி வருகின்றனர்.

இதனால் இவ்வைத்தியசாலையில் மரண விசாரணை மேற்கொள்ளுதல், சந்தேகத்திற்குரிய சடலங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல், இதற்கு தேவையான அறிக்கையை நீதிமன்றுக்குச் சமர்ப்பித்தல் போன்ற சேவைகளைப் பொதுமக்கள் நிரந்தர அதிகாரி மூலம் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தொடர்ந்து நீடித்து வருகின்றது.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது எனினும் இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

## யுத்தத்தை நடத்துவதன் மூலம் நாம் எந்தப் பயனையும் அடைய முடியாது

## அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க தெரிவிப்பு

விடுதலைப்புலிகளுடன் நடத்தப்பட்டுவரும் சமாதானப் பேச்சுக்களில் இதுவரை இறுதியான தீர்வு எதுவும் எட்டப்படவில்லை. இறுதித் தீர்வு மக்கள் முன்கொண்டுவரப்பட்ட பின்னரே அது நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடாத்திய செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இக்கருத்தை வெளியிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் வாழும் அனைத்துப் பிரஜைகளுக்கும் நியாயமான உரிமைகள் கிடைக்கவேண்டும். அதுவே பிரச்சினைக்கு இறுதியான தீர்வாக அமையும். தற்போது புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுக்களின் மூலம் சிறந்ததொரு அரசியல் தீர்வைக்காண வேண்டும்.

யுத்தத்தின் மூலம் நாம் எந்தப் பயனையும் அடையமுடியாது. அதிகாரப் பரவலாக்கம் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகளைக் கொண்டு வரமுடியும். அதிகாரப்பரவல் திட்டத்தை முன்வைக்கும் போது மிகவும் அவதானமாக இருப்போம்.

இறுதியான அரசியல் தீர்வை மக்கள் முன் சமர்ப்பித்து அவர்களின் அங்கீகாரத்துடனேயே அதை அரசாங்கம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கும் எனவும் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க மேலும் தெரிவித்தார்.

(01)

# கொலம்பியாவின் அழிவின் பின்னால்...



கொலம்பியாவிலிருந்து பூமி இப்படித் தெரிந்தது.

அமெரிக்காவின் விண்வெளி விபத்து மரணங்களில் கொலம்பியா இடண்டாவது. முதல் விபத்து 1986 ஜனவரியில் சலஞ்சர் விண்லூடம் புறப்பட்டபோது வெடித்துச்சிதறி 7 பேர் மாண்டதாகும். இதற்கு முன் 1967 இல் அப்பொலோ-1 விண்கலம் தரையில் பயிற்சியின் போது ஏற்பட்ட தீவிபத்தில் வெடித்துச் சிதறியதில் 3 பேர் மாண்டனர்.



முதற்தடவை தரையிறங்கும் கொலம்பியா.

அமெரிக்காவின் விண்மனிதப் பயணக்கலங்களில் கொலம்பியா 4 ஆவது தலைமுறையாகும்.

அமெரிக்கா- நாசாவின் முதல் தலைமுறை மனித



இஸ்ரேலியரான ரமோன் கொலம்பியாவில்.

# தரையிறங்கும்போது நடந்த தவறு!



கொலம்பியாவில் லோரல் கிளார்க்.

பயண விண்கலம் மேர்க்குரி என்ற பெயருடையது. ஒரு மனிதன் மட்டும் பயணிக்கும் வகையிலான மெர்க்குரி ஒரு கூம்பு படிமறகலம். இந்தக்கலம் ரொக்கட் மூலம் விண்வெளிச் சுற்றுப் பாதைக்குச் சென்று பூமிக்குத் திரும்புகையில் மனிதர் இருக்கும் அறை மட்டும் பரசூட் மூலம் வேகத்தைக் குறைத்து கடலில் இறங்கும்.



துண்டாகி வீழ்ந்ததைக் காண மக்கள் கூட்டம்.

அமெரிக்காவின் முதல் மூன்று தலைமுறை விண்க லங்களும் இந்த வகையினதே. 2ஆம் தலைமுறை விண்கலம் 'ஜெமினி'. இதில் இருவர் பயணம் செய்தனர்.

சந்திரனுக்கு மனிதனைக் கொண்டு சென்ற அப்பொலோ விண்கலம் 3 ஆம் தலைமுறை. இதில் 3 பேர் பயணம் செய்தனர். 1970 களின் நடுப்பகுதியுடன் அப்பொலோக்களின் பயணங்கள் முடிவுக்கு வந்தன. முதல் 3 தலைமுறை விண்கலங்களில் ஒரு சிறுபகுதியே பூமிக்குத் திரும்புகின்றன. ஏனைய பகுதிகள் விண்ணில் கழற்றிவிடப்படுகின்றன. அதனால் ஒவ்வொரு மனிதப் பயணத்திற்கும் விண்கலங்களை முழுமையாகக் கட்டமைக்க வேணடும். இந்தச் சூழலில் செலவைக் குறைக்க மீள் பயன்பாட்டு விண்கலங்களை கட்டும் ஆய்வை 1972 முதலே நாஸா மேற்கொண்டது. விமான வடிவத்தை ஒத்த மீள்பயன்பாட்டு விண்கல வடிவம் உருவாக்கப்பட்டு 1979 இல் வெற்றிகரமாக சோதனை ஓட்டமும் மேற்கொள்ளப்பட்டது. அந்த முதல் விண்லூடம் தான் கொலம்பியா.




வெப்பத்தைத் தடுக்கும் சுவர்ப்பகுதி, அதிகாரி கையில்.

இந்த கொலம்பியா விண்லூடம் விமான வடிவுடையது. இது ஒரு பெரிய எரிபொருள் தாங்கியின் மீது பொருத்தப்படுகின்றது. எரிபொருள் தாங்கியின் இருபுறமும் இரு திண்ம எரிபொருள் ரொக்கட்கள் பொருத்தப்படுகின்றன. கொலம்பியாவின் மூன்று ரொக்கட் எஞ்சின்கள் உள்ளன. இந்த எஞ்சின்கள் எரிபொருள் தாங்கியிலிருந்து எரிபொருளைப் பெற்று இயங்கின.

பயண ஆரம்பத்தில் திண்ம ரொக்கட்களும், கொலம்பியா ரொக்கட் எஞ்சின்களும் இயங்கி விண் பயணத்தை ஆரம்பிக்கின்றன. திண்ம எரிபொருள் ரொக்கட்கள் எரிந்துமுடியய் அவை இரண்டும் எரிபொருள் தாங்கியிலிருந்து விலகி பரசூட் மூலம் கடலில் வீழ்கின்றன.

பிரதான எரிபொருள் தாங்கியும்- எரிபொருள் முடிய பரசூட் மூலம் கடலில் வீழ்கிறது. இவை மீள பயன்படுத்தப்படுவன. விண்கலம் சுற்றுப்பாதைக்குச் சென்று பணியை மேற்கொண்டு பூமிக்குத் திரும்பு கின்றவேளை வால் கீழே இருக்கத்தக்கதாக விண் ஓடம் பூமியின் மீது வீழ்கிறது. அந்த வீழ்ச்சியின்போது விண் ஓட ரொக்கட்கள் இயங்கி அதன் வேகத்தைக் குறைக்கின்றன. இந்த வீழ்சியின்போது பூமியின் வளிமண்டலத்தில் விண் ஓடம் உராய, விண் ஓடத்தை சாம்பராக்குகின்ற வெப்பம் ஏற்படுகின்றது. விண்ஓடத்தின் மேற்புறம் பொருத்தப்பட்டுள்ள சிலிக்கன் ஓடுகள் உயர் வெப்பத்தைத் தாங்கி விண் ஓடத்தைக் காப்பாற்றுகின்றன.

இதிலிருந்து தப்பும் விண்ஓடம் தலைகீழ் நிலையிலிருந்து விமானம் புறப்படும் நிலைக்குத் திரும்புகின்றது. இதன்போது அதில் எந்த எஞ்சின்களும் இயங்குவதில்லை. ஒரு கிளைடராகவே சுயாதீனமாக அது பூமியை நோக்கி வீழ்கின்றது. அதன் இறக்கை துடுப்புக்களைக் கொண்டு அதன் தரையிறக்கம் கட்டுப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு பறப்பு கட்டுப்படுத்தப்பட்டு ஓடு பாதையில் தரையிறக்கப்படும்போது பரசூட் விரிந்து அதனை நிறுத்துகின்றது.

இந்த தரையிறக்க வேளையில் தான் கொலம்பியா வெடித்துச் சிதறியது. 1986 இல் சலஞ்சர் விண் ஓடம் வெடித்துச்சிதறியது.

இப்பொழுது அமெரிக்க மனித விண்பயணத்திற்கு டிஸ்கவரி, என்டேவர் ஆகிய விண்லூடங்கள் மட்டுமே உள்ளன.

ரஷ்யாவைப் பொறுத்தவரை ஒவ்வொரு மனித விண் பயணத்திற்கும் - தனித்தனி விண்கலங்க ளையே கட்டுகின்றது. அந்தவகை விண்கலங்களின் பெயர் 'சோயுஸ்' ஆகும். இது ரஷ்யாவின் மூன்றாம் தலைமுறை விண்கலமாகும். 4 ஆம் தலைமுறை விண் ஓடமொனறை ரஷ்யா கட்டியபோதும் சோதனை ஓட்டத்துடன் அது கைவிடப்பட்டது. இன்று அது ஒரு உல்லாச விடுதியாக்கப்பட்டுவிட்டது.

*



சீரமைப்புப் பணியில் கொலம்பியா.



இந்த வானில்தான் விண்வெளிவீரர்கள் ஏற்றிவரப்படவிருந்தனர். வெறுமையாகத் திரும்புகின்றது.



உடைந்த விண்கலத்தின் ஒரு பகுதி.

## ஆதிரு அருவி

# ஆரவாரமற்ற பக்தியின் பெருமை

## ஆன்மீக அரங்கம்



இறைவனை அவனது அருளைப் பெறுவதற்கு ஆத்மார்த்தமான பக்தி மட்டுமே போதுமானது. ஆரவார ஆடம்பர வழிபாடுகள் தேவையற்றது என்பதை விளக்கும் வகையில் பத்ம புராணத்தில்கூட ஒரு கதை விபரிக்கப்படுகின்றது.

காஞ்சியை ஆண்ட ஒரு மன்னன் சிறந்த விஷ்ணு பக்தன். ஸ்ரீ மகாவிஷ்ணுவின் திருவுருவமே அலாதியான அழகுகொண்டது. அத்தகைய சுந்தரக் கடவுளுக்கு மேலும் பலவகையான ஆடை - ஆபரணங்கள் அணிவித்து மணம்வீசும் மலர் மாலைகள் சூட்டி அழகு பார்த்து ஆராதித்து வந்தான் அவன். அது மட்டுமல்லாமல் திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட ஸ்ரீமந்நாராயணனின் திருவுருவ விக்கிரகம் ஒன்று செய்வித்து அதற்கு நாள்தோறும் நானாவித அலங்காரங்கள் செய்தும் சுவைமிக்க பண்டங்களையும், பழங்களையும் நிவேதனம் செய்து வழிபட்டு வந்தான். அவனது மனதில் தன்னைப்போல் சிறப்பாக வழிபாடு செய்வதற்கு எவராலும் முடியாது என்ற இறுமாப்பும் தோன்றியது. இதனால் அவன் மற்றவர்களை செருக்குடனே பார்த்தான். ஒருநாள் அரசன் வெளியில் சென்று திரும்பும் வழியில் ஒரு மரத்தடியில் ஓர் எளிய பக்தர், துளசி மாலை அணிந்த ஒரு விக்கிரத்திற்கு துளசிதங்களால் அர்ச்சனை செய்வதையும் பார்த்தான்.

தான் பலவகையான அலங்காரங்கள் செய்து வழிபடும் பரந்தாமனைப் பரதேசிக் கோலத்தில் வைத்திருக்கும் அந்த எளிய பக்தரைத் தன்னருகே அழைத்த அரசன் - "நீ என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? செல்வத்திருமகளின் நாயகனை இப்படி பரதேசிக் கோலத்தில் வைத்திருக்கிறாயே? அங்கே வந்து பார், விஷ்ணுவின் திருவுருவை நான் எப்படியெல்லாம் அலங்கரித்து, வழிபாடு செய்கிறேன் என்பதைப் பார். ஆனால் நீ வெறும் துளசி மாலை மட்டும் சாத்தி வைத்திருக்கிறாயே" என்றான். தனது செருக்கினால் வெளிப்பட்ட வார்த்தைகள் அந்த ஏழை பக்தரின் மனதைப் புண்படுத்தி விட்டது என்பதை அவன் அறியவில்லை. நாடாளும் அவனுக்கும், பரம ஏழையான அந்த பக்தருக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூட அவன் உணரவில்லை.

ஆனால், பகவானிடம் பக்தி செலுத்துவது மட்டுமே பிறவிப்பயனாகக் கருதிய அந்த பரம பக்தர் 'ஐயா, தாங்கள் நாடாளும் மன்னர். நானோ தங்கள் நாட்டின் ஒரு சாதாரண பிரஜை. அப்படியிருக்க, என்னால் எப்படி தங்களைப்போல் ஆடம்பரமான பூஜை வழிபாடுகள் செய்ய முடியும்? ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் பகவானை வழிபடு வதற்கு இதயத்தில் பக்தி மட்டுமே நிரம்பி வழிந்தால்போதும். பரிமளமான பக்தி மலரை பகவானுக்குச் சமர்ப்பிப்பது தவிர சிறந்த வழிபாடு எதுவுமில்லை.

இறைவனைச் செல்வத்தாலும், செல்வாக்காலும் அளக்க முடியாது. ஆனால் ஆத்மார்த்தமான பக்தியினால் ஆண்டவனை அடையலாம். இது உறுதி, என்றார். பிறகு அவர் தனது தேனினுமினிய குரலில் விஷ்ணு தோத்திரங்களைப் பாடியபடி இறைவனை வழிபடுவதில் முனைந்து விட்டார். இதைக்கேட்ட அரசன் கோபமும், கர்வமும் தொனிக்கும் குரலில் "அந்தணனே! நம் இருவரின் பக்தியில் எது சிறந்தது என்பதைப் பார்த்து விடலாம். நம்மில் யாருக்கு இறைவன் முதலில் தரிசனம் கொடுக்கிறானோ அவரது பக்தியே சிறந்தது" என்று சொல்லி விட்டு அரண்மனைக்குத் திரும்பினான்.

அரண்மனைக்குச் சென்ற அரசன மகரிஷி ஒருவரை வரவழைத்து பகவானைத்தரிசிப்பதற்கு மிகுந்த பொருட்செலவில் நகரை அலங்கரித்து ஒரு வேள்விக்கு ஏற்பாடு செய்தான். அந்தணர்களின் வேத முழக்கங்களும், யாகத்தின்போது அளிக்கப்படும் தானதர்மங்களும் மக்களை காஞ்சியை நோக்கி வரச்செய்தன. அனைத்து மக்களும் அரசனின் சிறப்புமிக்க பக்தியைப் பாராட்டினார்கள்.

ஏழை அந்தணரோ வழக்கம்போல் விரதம், உபவாசம் என்று பகவானை ஆராதித்து வந்தாலும் ஷேத்திர சந்நியாசம் என்ற ஒரு வகைத்துறவை மேற்கொண்டு காஞ்சியை விட்டுநீங்கி அனந்த சயன தீர்த்தம் என்னும் இடத்தில் தங்கி விஷ்ணுவை வழிபட்டு வந்தார். பகலில் ஒருமுறை மட்டுமே தன்கையால் அமுது சமைத்து, அதை பகவானுக்குப் படைத்த பிறகுதான் தான் சாப்பிடுவார்.

ஒருநாள் அந்தணர் சமைத்து வைத்த உணவு, அவர் நீராடிவிட்டு வருவதற்குள் காணாமற்போய்விட்டது. அதற்காக அவர் கலங்காமல் மறுபடியும் உணவு சமைத்தால் பகவானை வழிபடும் நேரம் குறைந்துவிடுமே என்ற நினைப்பிலே பட்டினியாகவே இருந்து பகவானை வழிபட்டார். இதேநிலை தினமும் நீடித்தது. ஏழாவது நாள் வழக்கம் போல் அவர் உணவு சமைத்து வைத்துவிட்டு நீராடி வரச்சென்றார். நீராடிவிட்டு அவர் திரும்பி வரும்போது அவருடைய குடிசையில் இருந்து ஒருவன் உணவுப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு ஓடுவதைப் பார்த்தார். உடனே ஒரு கிண்ணத்தில் நெய்யை எடுத்துக் கொண்டு அவனிடம் கொடுப்பதற்காக விரைந்து சென்றார். சற்றுத் தூரம் ஓடிய அவன் மயங்கி விழுந்துவிட்டான். உடனே அந்தணர் அவனைத் தம் மடியில் கிடத்தி மயக்கம் தெளிவித்து உணவூட்ட முற்பட்டார். உடனே அவன் சங்கு சக்கரதாரியாகத் தோன்றி "அப்பனே உனக்கான சோதனையில் நீ தேர்ச்சி பெற்று விட்டாய்" என்று கூறி அருளியதுடன் தேவர்கள் பூமழை பொழிய விமானத்தில் ஏற்றி வைகுண்டம் அனுப்பினார்.

அந்தணர் ஏறிச்சென்ற விமானம் மன்னனின் யாகசாலையின் மீதாகப்பறந்து செல்வதைப் பார்த்த மன்னன் தெளிவுபெற்றான். ஆண்டவனை அடைய ஆரவார பக்தியினால் முடியாது - ஆத்மார்த்தமான அன்புடன் செலுத்தும் பக்தியினாலேயே முடியும் என்று உணர்ந்த மன்னன் யாகத்தை நிறுத்துமாறு கூறி, மற்றவர்கள் தடுக்கும் முன் கண்ணீர் விட்டு அழுதபடி யாகத் தீயில் குதித்து உயிர்த் தியாகம் செய்துவிட்டான். உடனே விஷ்ணு பகவான் அவனுக்கும் திருக்காட்சி தந்து அவனையும் தன்திருவடியில் சேர்த்துக்கொண்டார்.

- கவிமாமணி.



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## சௌரவ் சந்திதாஸ் கங்கூலி
(அணித்தலைவர்)



*பிறந்தது* - 08.02.1972 கொல்கத்தா
*அணிகள்* - வங்காளம், இந்தியா, லங்காஷயர் (இங்).
இடதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை மெதுவான பந்துவீச்சு.

அறுகான வீச்சு நிறைந்த துடுப்பாட்டம். ஒருநாள் போட்டிகளில் முன்னே பாய்ந்து பந்தைத் துவம்சம் செய்வது தனிரகம். இவரது விடாமுயற்சியால் தன் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டவர். இருவகை ஆட்டங்களிலும் இவர் இல்லாமல் தற்போது அணி இல்லை. இந்தியாவின் அதிசிறந்த இடதுகை துடுப்பாட்டவீரர். தாயகத்துக்கு வெளியே அதிக வெற்றிகள் கண்ட அணித்தலைவர். டெஸ்ட் - 67, ஓட்டங்கள் 4100, கூடிய தொகை 173, சதம் 9, அரைச்சதம் 50, ஒருநாள் போட்டி - 218, ஓட்டங்கள் 8255, கூடியதொகை 183, சதம் 19, அரைச் சதம் 50. பந்து வீச்சிலும் கணிசமான வெற்றியைக் கண்டவர். நியூசிலாந்தினாலான தாழ்நிலையிலிருந்து, உலகக் கிண்ணத்திற்கு உயர வேண்டிய பொறுப்பு.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 1996, லோர்ட்ஸ்.
*ஒருநாள் அறிமுகம்* - 91/92, பிறிஸ்பேன்.

## ராகுல் திராவிட்
(துணைத் தலைவர்)



*பிறந்தது* - 11.01.1973
*அணிகள்* - கர்நாடகா, இந்தியா, கென்ட் (இங்).
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை OFF BREAK.
விக்கெட் காப்பாளர்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 1996, லோட்ஸ்.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 95/96, சிங்கப்பூர்.

இந்திய அணியின் தூண்களில் ஒன்று. அதிரடி வீரர்கள் மத்தியில் நுட்பத்திறனுடன் ஆடும் வீரர். ஒருநாள் போட்டியில் இன்று துடுப்பாட்ட வீரர்/விக்கெட் காப்பாளர். இவரது நிதானம், CONCENTRATION அற்புதமானது. ஒரு டெஸ்டில் இரண்டு இன்னிங்ஸ்ஹம் சதம் போட்ட மூன்றாவது இந்தியர். டெஸ்ட் - 69, ஓட்டங்கள் 5614, அதிகூடிய தொகை 217, சதம் 14, அரைச்சதம் 28, ஒருநாள் ஆட்டம்- 196, ஓட்டங்கள் 6181, கூடியதொகை 153, சதம் 8, அரைச்சதம் 42, முதல்தர ஆட்டங்களில் 14000 ஓட்டங்கள்.

## வீரேந்தர் ஷேவாக்



*பிறந்தது* - 20.10.1978 டெல்கி.
*அணிகள்* - டெல்கி, லீஸ்டர்ஷயர் (இங்), இந்தியா.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை OFF BREAK.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் தென்.ஆ. 2001/02 புளூம்பொன்டெய்ன்.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 98/99 மொஹாலி.

மத்திய வரிசை வீரராக இருந்தவர். இன்று ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். மின்னல் வேகத் துடுப்பாட்டம். ஒருநாள் போலவே டெஸ்ட் ஆட்டமும். முதல் டெஸ்டில் சதம். ஆக்ரோஷமான வீரர். உலகின் எந்தப் பந்து வீச்சாளருக்கும் பணிந்து கொடுக்காதவர். தேவையான நேரத்தில் உபயோகமான பந்துவீச்சாளர். இவர் தனது நிலையை நீண்ட காலத்துக்குத் தக்கவைத்துக்கொள்வார். 14 டெஸ்ட், 872 ஓட்டங்கள், 3 சதம், 4 அரைச்சதம், கூடியது 147, 57 ஒருநாள் போட்டிகள், 1780 ஓட்டங்கள், 5 சதம், 8 அரைச்சதம், கூடியது 126.

## சச்சின் ரமேஷ் டெண்டுல்கர்



*பிறந்தது* - 24.4.1973, மும்பாய்.
*அணிகள்* - மும்பாய், யோர்க்ஷயர் (இங்), இந்தியா.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை மெது, OFF BREAK, LEG BREAK
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான். 89/90 கராச்சி
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 89/90 குஜ்ரன்வாலா.

உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரரான டொன் பிரட்மனுடன் ஒப்பிடப்பட்டவர். விவியன் றிச்சட்சை விட்டால், சமகாலத்தில் பூரணமான துடுப்பாட்டவீரர். ஆட்டம் பாழாகக்கூடாது என்பதற்காக அணித் தலைமையைத் துறந்தவர். இவரது சாதனைப்பட்டியல் மிக நீண்டது. இவரை எதிர்பார்க்கும் ரசிகர்கள் லட்சோபலட்சம். 105 டெஸ்ட், 8811 ஓட்டங்கள், கூடிய தொகை 217, சதம் 31, அரைச்சதம் 50, 303 ஒருநாள் ஆட்டம், 11546 ஓட்டங்கள், கூடிய தொகை 186, சதம் 33, அரைச்சதம் 56.

## நாளும் ஒரு வினா

**உலகக் கிண்ணப் போட்டிகளில் ஹற்ரிக் (HATTRICK) பெற்ற வீரர்கள் யார்?**

**சேத்தன் சர்மா - இந்தியா (1987)**
**சக்லெய்ன் முஸ்டாக் - பாகிஸ்தான் (1999)**

## அனில் கும்ப்ளே.



*பிறந்தது* - 17.10.1970, பெங்களூர் (கர்நாடகா).
*அணிகள்* - கர்நாடகா, நொதெம்ப்டன் ஷயர் (இங்), லீஸ்டர்ஷயர் (இங்), இந்தியா.
வலதுகைத் துடுப்பாட்டம்.
LEG BREAK GOOGLY.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 1990 மான்செஸ்ரர் (இங்).
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 89/90 ஷார்ஜா.

90 களில் முதன்மைப் பந்துவீச்சாளர். இவரின் சுழல் பந்துவீச்சில் துடுப்பாட்ட வீரர்கள் நிலைதடுமாறுவர். இன்றைய அணியின் உலகத்தரச் சுழல் பந்துவீச்சாளர். ஆனால் பந்து வீச்சின் உக்கிரம் தணிந்துள்ளது. இவரது திறமை, அனுபவம் இரண்டும் உலகக்கிண்ண அணிக்குள் இடம்கொடுத்தது. தென்னாபிரிக்க FLAT களங்களில் சாதிப்பார் என்ற நம்பிக்கை நிறைய உண்டு. டெஸ்ட் 76, விக்கெட் 349, ஒருநாள் ஆட்டம் 238, விக்கெட் 303.

## ஹர்பஜன் சிங்



*பிறந்தது* - 03.07.1980 ஜலந்தர், பஞ்சாப்.
*அணிகள்* - பஞ்சாப், இந்தியா.
வலதுகை OFF BREAK.
வலதுகைத் துடுப்பாட்டம்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் அவுஸ்ரேலியா 97/98 பங்களூர்.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 97/98 சார்ஜா.

பந்து வீச்சு முறையைச் சீர்செய்து கொள்ளச் சிறிது காலம் தேவைப்பட்டது. இவரது தளராத முயற்சியால் மீண்டும் அணிக்குள் நுழைந்தவர். அவுஸ்ரேலியாவுக்கு எதிராக 3 டெஸ்ட்களில் 32 விக்கெட்டுகள். (பிஷன்சிங்பேடி - 5 டெஸ்ட், 31 விக்கெட்) ஒருநாள் கிரிக்கெட்டில் ஆபத்தான பந்து வீச்சாளர். பிரிக்கமுடியாத இணைகளைப் பிரிப்பவர். உலகக் கிண்ணப் போட்டிகளில் இவரது பங்களிப்பு பெரிதாகவே எதிர்பார்க்கப்படும். 33 டெஸ்ட், 144 விக்கெட் சிறப்பாக 8/84, 63 ஒருநாள் போட்டி, 83 விக்கெட், சிறப்பாக 5/43.




## ஜவகல் சிறீநாத்



*பிறந்தது* - 31.08.1969 மைசூர் (கர்நாடகா).
*அணிகள்* - கர்நாடகா, இந்தியா, குளோஸ்டர்ஷயர் (இங்), லீஸ்டர்ஷயர் (இங்).
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை FAST MEDIUM.

இந்தியாவின் தலைமைப் பந்துவீச்சாளர். மிக நம்பகமானவர். ஆரம்பப் பந்துவீச்சாளர். எந்தவகைத் தளங்களிலும் தன் விருப்பப்படி பந்துவீசும் ஆற்றல் மிக்கவர். இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, அவுஸ்ரேலியா தளங்களில் கூடிய விக்கெட் பெற்றவர் இவர். ஒருநாள் போட்டிகளில் விளையாடத் தயார். இப்போதும் இந்தியத் தெரிவுக்குழு இவர் மீது பொறுப்பைச் சுமத்தியிருக்கிறது. இவரது அனுபவம் அணிக்கு ஒரு வரப்பிரசாதம். டெஸ்ட் - 67, விக்கெட் 236, திறமை 8/86, ஒருநாள் ஆட்டம் - 218, விக்கெட் 299, திறமை 5/23.

## ஷாஹீர் கான்



*பிறந்தது* - 07.10.1978 மஹாராஷ்ட்ரா.
*அணிகள்* - பரோடா, இந்தியா.
வலதுகைத் துடுப்பாட்டம்
இடதுகை FAST MEDIUM.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பங்களாதேஷ் 2000/01 டாக்கா.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் கென்யா 2000/01 நைரோபி.

இந்திய அணியின் இளம்புயல். பந்து வீச்சு வரட்சியின் ஒரு பகுதியைப் பசுமையாக்கியவர். எந்த அணி வீரரும் ஷாஹீர் கானைக் கவனமாகக் கருத்திற்கொள்ளும் அளவிற்குத் துல்லியம், திறமை, நுணுக்கம் நிறைந்த பந்துவீச்சு. இவர் ஆக்ரோஷமான கீழ் வரிசைத் துடுப்பாட்டவீரரும் கூட. எதையும் இலகுவில் விட்டுக் கொடுக்காத இளமையின் துடிப்பு. டெஸ்ட்-24, விக்கெட் 73, திறமை 5/29, ஒருநாள் போட்டி-56, விக்கெட் 86, திறமை 4/42.

## ஆஷிஸ் நெஹ்ரா



*பிறந்தது* - 29.04.1979 டெல்கி.
*அணிகள்* - டெல்கி, இந்தியா.
வலதுகைத் துடுப்பாட்டம்.
இடது கை FAST MEDIUM.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இலங்கை 98/99 கொழும்பு.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் சிம்பாப்வே 2001 ஹராரே.

13 டெஸ்ட், 33 விக்கெட், திறமை 4/72, 30 ஒருநாள் போட்டி, 30 விக்கெட், திறமை 3/30. 1999 இன் பின் இரண்டு வருட அஞ்ஞாதவாசம். மீண்டும் அணியில் இடம். மீண்டும் நீக்கம். திறமையும், இவரது அதிர்ஷ்டமும் சேர்ந்தே இவரை உலகக் கிண்ணப் போட்டிக்கான அணிக்குள் சேர்த்தன. இந்த உலகக் கிண்ணப் போட்டிகளைச் சரியாகப் பயன்படுத்தினால் இவரது பிரபல்யம் தொடரும்.

## தினேஷ் மொங்கியா



*பிறந்தது* - 17.04.1977 சண்டிகார்.
*அணிகள்* - பஞ்சாப், இந்தியா.
இடதுகைத் துடுப்பாட்டம்.
மெது இடதுகை ORTHODOX.

32 ஒருநாள் போட்டி, 805 ஓட்டங்கள், கூடியது 159, சதம் 1, அரைச்சதம் 2. அணிக்குள் இருந்த காலம் குறைவு. ஆனால் அதிதிறமைசாலி. ஷேவாக்கையும் அண்ணாந்து பார்க்க வைக்கும் ஆக்ரோஷம். இம்முறை உலகக் கிண்ணம் இவருக்கு இறுதி CHANCE.

## பார்த்திவ் அஜேய் பட்டேல்



*பிறந்தது* - 09.03.1985 அஹமதபாத்.
*அணிகள்* - குஜராத், இந்தியா.
இடதுகைத் துடுப்பாட்டம்.
விக்கெட் காப்பாளர்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 2002 நொட்டிங்கம்
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 2002 ஹமில்ரன்.

இந்திய 'அக்கினி' ஏவுகணைக்குப் பிறகு அதிகமாகப் பேசப்பட்டவர். சிறந்த உலக விக்கெட் காப்பாளர்களின் கலவை. 17 வயதில் 19 வயதிற்குட்பட்ட இந்திய அணித் தலைவர். இம்முறை களங்காணும் மழலைப் பட்டாளங்களில் முதன்மையானவர்.

## சஞ்சய் பங்கார்

*பிறந்தது* - 11.10.1972 மஹாராஷ்ட்ரா.
*அணிகள்* - நெயில்வேஸ், இந்தியா.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை MEDIUM FAST.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 2001/02 மொகாலி.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 2002/03 ஆக்லந்து.



ஒரு நம்பகமான சகலதுறை ஆட்டக்காரர் சாதகமற்ற தடங்களில் விக்கெட் எடுப்பார். 15 வயதுப் பிரிவிலிருந்து படிப் படியாக விளையாடி வந்தவர். இவரது வளர்ச்சிக்கு உறுதுணை இவர் தொழில் பார்க்கும் நெயில் வேஸ். சிறிது தாமதமாக அனுபவ முதிர்ச்சி பெற்றவர். டெஸ்ட்- 12, சதம் 1, அரைச்சதம் 3, ஒருநாள் போட்டி - 11, ஒரு அரைச்சதம்.

## அஜித் பால்சந்த்ரா அகர்கார்



*பிறந்தது* - 04.12.1977 மும்பாய்.
*அணிகள்* - மும்பாய், இந்தியா.
வலதுகை FAST MEDIUM.
வலதுகைத் துடுப்பாட்டம்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் சிம்பாப்வே 98/99 ஹராரே.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் அவுஸ்திரேலியா 97/98 கொச்சி.

16 டெஸ்ட், 356 ஓட்டங்கள், 35 விக்கெட், திறமை 3/43, 110 ஒருநாள்போட்டி, 782 ஓட்டங்கள், 166 விக்கெட், திறமை 4/25.
90 களின் பிற்பகுதியில் இவர் சூறாவளியாகத் திகழ்ந்தார். மிகவும் எதிர்பார்க்கப்பட்டவர். ஆனால் இடையில் எதிர்பாராத தொய்வுகள் ஏற்பட்டன. ஆரம்ப வீச்சு படிப்படியாகக் குறைந்து செல்வதே பொதுவானதாக இருக்கின்றது. தற்போது மிகுந்த போராட்டத்தின் பின்பே அணிக்குள் நுழைந்துள்ளார். உலகக்கிண்ணப் போட்டிகளில் இவர் காட்டும் திறமையைப் பொறுத்தே எதிர்காலம் அமையும்.

## யுவ்ராஜ் சிங்



*பிறந்தது* - 12.12.1981 சண்டிகார்.
*அணிகள்* - பஞ்சாப், இந்தியா.
இடதுகைத் துடுப்பாட்டம்.
இடதுகை ORTHODOX.
இடதுகை MEDIUM.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் கென்யா 2000/01 கென்யா.

துடுப்பாட்ட நம்பிக்கை நட்சத்திரம். ஒரு சந்தர்ப்பத்தில் அணியிலிருந்து நீக்கப்பட்டார். ஆனால், அண்மைக்காலத்தில் அவரது அபாரமான துடுப்பாட்டம் மற்றும் களத்தடுப்பு, இவரில்லாமல் அணி இல்லை என்ற நிலையை உருவாக்கியுள்ளது. இந்திய அணியின் வெற்றிகளில் இவரது பங்களிப்பு நிறையவே இருக்கும். ஒருநாள் ஆட்டம் -59, ஓட்டங்கள் 1289, அதிகூடியது 98.

## மொஹமட் கை.:.ப்



*பிறந்தது* - 01.12.1980 உத்தரப்பிரதேசம்.
*அணிகள்* - உத்தரப் பிரதேசம், லீஸ்டர் ஷயர் (இங்), இந்தியா.
வலதுகைத் துடுப்பாட்டவீரர்.
வலதுகை OFF BREAK.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் தெ.ஆபிரிக்கா 99/2000 பங்களூர்.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 2001/02 கான்பூர்.

இந்திய அணிக்குள் நுழைந்துள்ள இன்னொரு இளம்புயல். துடுப்பாட்டம், களத்தடுப்பு இரண்டிலும் அற்புதமான திறமை. அவுஸ்திரேலியா சென்று பயிற்சி பெற்றவர். நீண்டகாலம் இவரது சாம்ராஜ்யம்தான். ஒருநாள் சர்வதேச ஆட்டம் - 37,ஓட்டங்கள் 717, உயர் ஓட்டம் 111, சதம் 1, அரைச்சதம் 3.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புனரமைப்பு முழுமை பெறாமல் நூலகம் திறப்பதற்கு ஆட்சேபம்!

## யாழ். பொது அமைப்புக்களின் ஒன்றியம் மாநகரசபைக்குக் கடிதம்

புனரமைப்புப் பணிகள் முழுமை பெறாமல் யாழ்.மாநகர பொது நூல கத்தைத் திறக்க முற்படுவதற்கு யாழ்மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தமது ஆட்சேபத்தைத் தெரி வித்துள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாநகர சபையின் முதல்வர் மற்றும் உறுப் பினர்களுக்கு - 'அரசியல் ஆதாயத்திற் காக நூலகத்தைத் திறப்பு' என்ற தலைப்பில் என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தென்கிழக்காசியாவின் முதன்மை யான நூலகமாகவும், தமிழர் பெரு மையை பறைசாற்றுகின்ற பெரும் சொத்தாகவும் விளங்கிய பெரும் நூலகம், சிங்களப் பேரினவாதிகளின் அடக்குமுறை ஆட்சியின் பிரதிபலிப் பான சிங்களக் கூலிகளினால் மே 31, 1981 ஆம ஆண்டு இரவோடிரவாகத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. இது எம் நெஞ்சில் மாற்றமுடியாத கறை படிந்த நிகழ்வாகவே இன்றும் எம் நினைவில் நிற்கின்றன. இதை நினைத்து இன்றும் கண்ணீர் வடிப் பவர்கள் பலர்.

இந்தக் கறைபடிந்த வரலாற்றை மாற்றி அமைப்பதற்காக - அதே சிங் கள தேசத்தின் அரசுகள் தம்மை இப்பழியில் இருந்து விடுவித்துக்கொள் வதற்காக - முண்டியடித்துக்கொண்டு "ஆனைப்பசிக்கு சோழன் பொரி" போன்று ஏதோ வழங்கினார்களாம்.

நூல் நிலையமும் ஏதோ ஒரு வகையில் அரைகுறையாகப் புனர மைக்கப்பட்டுள்ளது. ஆனால், அதன் முழுமையான தேவைகள், வளங்கள முற்றுமுழுதாகக் கிடைக்கப்பெற்றதா என்றால் அதுவும் கேள்விக்குறியாக இருக்கிறது. புனரமைப்பு வேலைக ளும் முற்றாக நிறைவேற்றப்பட்டதா என்றால் அதுவும் கேள்விக்குறியே. தமிழரின் வரலாற்றின் பட்டறிவின் காரணத்தால் கூறுகின்றோம். ஏன் இந்த அவசரம். மாநகர சபை அவச ரம் காட்டுவதன் காரணம் என்ன? மாநகர சபையின் பதவிக்காலம் முடி வடையப் போவதா? அல்லது கல் லில் பெயர் பதித்து பெருமை தேடும் எண்ணமா? இதை இன்னு[...] சூழலில் எவரும் ஏற்கத் தயாரில்லை.

அமைச்சர்களையும், அரசியல் வாதிகளையும் அழைத்து ஆடம்பர விழாவெடுத்து போடுவதனால் பொதுநூலகத்தின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாகி விட்டது என்பது அர்த்தமல்ல. இந்த நூலகத்திற்கு உயிர்கொடுத்த உத்த மர்களின் உணர்வுக்கு மதிப்பளித்து முற்றும் முழுமை நிறைந்த ஒரு நூல கத்தின் திறப்பு விழாவையே எம் கண்களினால் காணத்துடிக்கின்றோம். அதன்சேவைகளை முழுமையாக அனுபவிக்க விரும்புகின்றோம்.

இதனை மாநகர சபையினரும் அவர்களுடன் சம்பந்தப்பட்டவர்களும் உணர்வார்கள் என எதிர்பார்க்கிறோம். மக்களின் உணர்விற்கும் உளக்கு முறல்களுக்கும் மதிப்பளித்து இவ்விட யத்தில் நல்ல முடிவை எடுத்து முழுமை நிறைந்த யாழ்.நூலகத்தின் திறப்பு விழாவிற்கு வழிசமைத்து அதுவரை காத்திருக்கும்படி யாழ்ப் பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டி நிற்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



யாழ்.வந்த அமெரிக்க உயர் அதிகாரி சர்வமதத் தலைவர்களுடன்.

# வடபகுதி மக்களின் வாழ்நிலைமையை மேம்படுத்த சர்வதேசம் உதவவேண்டும்

## அமெரிக்க உயர் அதிகாரியிடம் யாழ். ஆயர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்) 'நீண்டகால யுத் தத்தினால் அழிவு களையும் அனர்த் தங்களையும் சந் தித்த வடபகுதி மக் களின் வாழ்வு நிலை யை மேம்படுத்த, சர் வதேச சமூகம் தொடர்ந்தும் உதவி புரிய வேண்டும்' இவ்வாறு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நேற்றுத் தம்மைச் சந்தித்த அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் விசேட பிரதிநிதியும், அமெரிக் காவின் தெற்காசிய அரசியல் விவகாரங்களுக்கான அதி காரியுமான டேவிட் குட்டிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அமெரிக்க அரசும் சர்வதேச சமூகமும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பகுதி மக்களுக்கு தொடர்ச்சியான மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ள வேண்டும். இதன்மூலம்தான் மக்கள் உண்மையான சமாதானத் தின் பலாபலன்களை அனுபவிக்க முடியும் எனவும் ஆயர் கேட்டுக்கொண்டார்.

நேற்றைய கலந்துரையாடலின்போது - சர்வமதத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### புஷ்ஷின்...

பின்னர் நண்பகல் 1 மணியளவில் இக்குழுவினர் பாஷையூரிலுள்ள 'யாழ்.பீச் இன்' ஹோட்டலில் மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதி களைச் சந்தித்துக் கலந்துரையா டலை நடத்தினர்.

இச்சந்திப்பில் அருட்திரு. ஜெயக் குமார், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். மாவட்ட இணைப் பதிகாரி றொகான் சந்திரசேகர, மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன், சறோஜா சிவச் சந்திரன், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்ட வதிவிடப் பிரதிநிதி, யூ.என்.எச்.சி.ஆர். யாழ். மாவட்ட வதிவிடப் பிரதிநிதி ஆகி யோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் விடுதலைப் புலி களின் ஆயுதக் களைவு பற்றி அமெ ரிக்க அதிகாரி கேட்டபோது, விடுத லைப் புலிகளின் ஆயுதங்களே தமக் குப் பாதுகாப்பைத் தந்ததாக சமுகமளித்திருந்தோர் தெரிவித்தனர்.

பின்னர் இக்குழுவினர் வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்க ளுக்கும் நேரடியாக விஜயம்செய்து நிலைமைகளைப் பார்வையிட்டனர். பின்னர் பலாலி சென்ற இவர்கள், நேற் றைய தினமே கொழும்பு சென்றனர்.

யாழ். நிலைவரம் பற்றித் தாம் நேரடியாக அவதானித்ததையும் பெற் றுக்கொண்ட தகவல்களையும் அடிப் படையாகவைத்து, விரிவான அறிக்கை யொன்றைத் தயாரிக்கவுள்ள இவர் கள், அதனை அமெரிக்க அரசாங் கத்திற்குச் சமர்ப்பிக்கவுள்ளனர். இவர் களது அறிக்கையில் யாழ்.குடா நாட்டு மக்களின் போர் நிறுத்தத் தின் பின்னரான வாழ்வுநிலை, உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் உட்பட பல விடயங்கள் இடம்பெறலாம் எனத் தெரியவருகின்றது. (சா,லி,200)

### சமாதானம்...

திலேயே அதிக ஆர்வம் காட்டினார்.

இப்பேச்சுக்களின்போது - மன் னார் மாவட்ட தற்போதைய சூழ் நிலை குறித்தும், தள்ளாடியிலும் தலைமன்னாரிலும் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களினால் பொது மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாகவும் மன்னார் ஆயர் சதீஸ் நம்பியாருக்கு எடுத்து விளக்கினார்.

மேலும், தற்போதைய சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலி களும் அரசும் அதிகளவு அர்ப்பணிப புடன் செயற்பட்டு வருவதால், சமா தான முயற்சிகள் நிச்சயமாக வெற்றி பெறும் என்றும், இதற்காக தாங்கள் இரு தரப்பினருக்கும் ஒத்துழைப்பு வழங்குவதுடன் ஆண்டவனைப் பிரார்த் திப்போம் என்றும் மன்னார் ஆயர் சதீஸ் நம்பியாரிடம் தெரிவித்தார்.

**உள்ளூர் கடற்பரப்பில் இந்திய மீனவர் அத்துமீறல்**

# ராஜதந்திர ரீதியாக தீர்வுகாண அமெரிக்கா உதவிபுரியுமாம்

குடாநாட்டு கடற்தொழிலாளர் கள் தொடர்பான பிரச்சினையையும் உள்ளூர் கடற்பரப்பில் இந்திய மீன வர்களின் அத்துமீறிய மீன்பிடித் தொழில் தொடர்பாகவும் யாழ். வந்த அமெரிக்க உயரதிகாரி டேவிட் குட்டிடம் நேற்று எடுத்துரைக்கப்பட் டது.

இதற்குப் பதிலளித்த டேவிட் குட், இவ்விடயம் தொடர்பாகத் தாம் இலங்கை மற்றும் இந்திய அரசாங் கங்களுடன் இராஜதந்திர ரீதியாக அணுகி இப்பிரச்சினையைத் தீர்க்க உதவிபுரிவதாகக் கூறினார்.

நேற்று யாழ்.ஆயர் இல்லத்தில் நடந்த சந்திப்பில் - முஸ்லிம் மக்கள சார்பில் கலந்துகொண்ட மௌலவி எஸ்.ஏ.சி.மூபின் இப்பிரச்சினை பற்றி அமெரிக்க உயரதிகாரிகளுக்கு எடுத்துக்கூறினார். (க,லி)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், கந்தர்மடம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹா கும் பாபிஷேகம் இன்று காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

### தலைவரால்...

சென்றுள்ள சு.ப.தமிழ்ச்செல்வன், செய்தி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது, உடன்பாடு காணப்படும் விட யங்கள் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் - இது விடயங்கள் தொடர்பில் தீவிரமாக ஐந்தாம் கட் டப்பேச்சின்போது ஆராயப்படவுள்ளன.

உயர்பாதுகாப்பு வலயம், மக்கள் மீள்குடியமர்வுக்கு சிபார்சு வழங்கு வதில் எந்த நாட்டு ஜெனரல்களை யும், எந்நாட்டு இராணுவ அதிகாரிகளை யும் அரசு அணுகலாம். அது அரசுக் குரிய பிரச்சினையாகும். இலங்கை அரசாலோ, படைத்தரப்பாலோ முன் வைக்கப்படும் நிலைப்பாட்டைப் பொறுத்துத்தான் நாங்கள் அதை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்ற நிலைப்பாட்டை எடுப்போம்.

அவர்களுக்கு எப்படிப் பரிசீலிப்ப தற்கு உரிமை இருக்கிறதோ, அதே போல் அதை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதை நாமும் எமது மக்களும் முடிவுசெய்ய வேண்டும்.

அரசினால் பெறப்படும் ஆலோ சனைகள், தமது ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் செயல் என்றால், அதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. எங்களுக்குத் தேவை எங் களுடைய மக்களின் உரிமைகள். எங்கள் மக்களின் வாழ்வு நிலை மேம்பட வேண்டும். நாங்கள் கௌரவ மாக, சுதந்திரமாக எமது மண்ணில் வாழவேண்டும். எங்களுடைய மக்க ளுக்கு நன்மையளிக்காத நிலைப் பாடுகளை நாங்கள் நிராகரிப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் வரி அறவிடுகின்றனர் என்ற பரப்புரை, சமாதானத்தைக் குழப்புவதற்காக முன்வைக்கப்படுகின்ற தவறான பிரசாரமாகும். நீண்ட காலமாக எங் களுடைய தமிழீழப் பிரதேசத்தில் ஒரு வரி நடைமுறையைப் பேணி வருகிறோம். இது எமது தேசத்திற் கான ஒரு தேவை. இதனை நாம் நீண்ட காலமாக நடைமுறைப்படுத்தி வருகின்றோம். வெளிநாடுகளிலுள்ள வரி நடைமுறையைப் பார்த்தால், அவர்கள் வரி நடைமுறைகளுக் குள்ளே வாழ்ந்து வருகின்றனர். ஒவ் வொரு நாட்டுக் குடிமகனும் தங்க ளுடைய தேசத்திற்காக அந்த வரி யைச் செலுத்தி வருகின்றனர். அது அவனுடைய கடமை.

விடுதலைப் போராட்டத்தை முன் னெடுத்துச் செல்கின்ற எங்களுடைய தேசியத் தலைவர் - பெரும் தடை களைத் தகர்த்து, எவ்வளவோ நிலப் பரப்புக்களை மீட்டு, எமது ஆளு கைக்குட்படுத்தி - தமிழீழ நிர்வாக அலகு செயற்பட்டுக்கொண்டிருக்கின் றது. 60 சதவீத நிலப்பரப்பு எமது கட்டுப்பாட்டுக்குள் உள்ளது.

அங்கு சட்டம், ஒழுங்கு பேணப் பட்டு வருகின்றது. நிர்வாக அலகு கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மக்களின் அடிப்படைத் தேவைகள் பலபக்கங்களால் பூர்த்திசெய்யப்படு கின்றன. எங்களுடைய தேசவிடுத லைக்காக, மக்களுக்காக, பாதுகாப் புக்காக வரி நடைமுறையைப் பேணி வருகின்றோம். இதுபற்றி பல இடங் களிலும் தெளிவாக விளங்கப் படுத்தியுள்ளோம்.

போரில் சிறுவர்களை நாம் பயன் படுத்துகின்றோம் எனப் பரப்புரை செய்வது வேடிக்கையானதும் மிக வும் நகைப்புக்கிடமானதுமான கருத் தாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

### உயர் பாதுகாப்பு...

பலர் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவே அதிகம் எடுத்துக் கூறினர்.

இதனைத் தொடர்ந்து டேவிட் குட் சுவாரசியமான பல கேள்வி களைத் தொடுத்தார்.

குடாநாட்டு மக்களின் முக்கிய பிரச்சினை உயர் பாதுகாப்பு வலயந தானா? என்றும் இதையகற்றினால் அப்பகுதிகளில் மக்கள் முழுமையாக மீள்குடியமர்வார்களா? என்பன போன்ற பல கேள்விகளை மனிதநேய அமைப் புக்களின் பிரதிநிதிகளிடம் கேட்டு நிலைமைகளை அறிந்துகொண்டார். (க,லி)

### ஐந்தாம்...

பெயர்ந்த மக்களின் காணி உரிமம் தொடர்பான பிரச்சினைகள் தொடர் பாகவும், ஏற்கனவே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது உடன் பாடு காணப்பட்ட விடயங்கள் தொடர் பாக களநிலையில் ஏற்பட்ட முன் னேற்றங்கள் தொடர்பாகவும் விரி வாக ஆராயப்படவுள்ளது.

## 'எழுந்திரு விழித்திரு' கண்காட்சி

சுவாமி விவேகானந்தரின் 'எழுந் திரு விழித்திரு' என்ற தொனிப் பொருளினாலான கண்காட்சி, இன்று காலை 10 மணிக்கு வேம்படி மக ளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள தாக பருத்தித்துறை ஸ்ரீ.இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் செயலா ளர் சித்ரூபானந்தா தெரிவித்தார்.

## ஹாட்லியில் மெய்வன்மைப் போட்டி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூ ரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப.2 மணிய ளவில் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது. அதிபர் வே.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ் வில், பிரதம விருந்தினராகக் கல் லூரியின் பழைய மாணவன் வி.சேது நாயகம் கலந்துகொள்ளவுள்ளார்.(42)

### சர்வதேச....

எதிர்வரும் நான்கு மாதங்களில் மேலும் 320 பேர் சர்வதேச மிதி வெடி அகற்றும் பயிற்சிகளை முடித் துக்கொண்டு பணிகளை மேற்கொள்ள இருப்பதாகவும், இதற்கான நிதி களை என்.ரி.ஏ. நிறுவனம் ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் கூறினார்.

புதிதாக வெளியேறும் அணி இன்று வடமராட்சி கிழக்கில் கண்[...] வெடிகள் அகற்றும் பணியில் ஈடு படவுள்ளது என்றும், மன்னாரில் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் நடவடிக்கைகளை மேற் கொள்ள எவ்.எஸ்.டி. நிறுவனம் நிதி மற்றும் பயிற்சிகளை வழங்கியுள் ளதாகவும் அவர் மேலும் தெரிவித் தார்.

**INFORMATION TECHNOLOGY PARK**
272, Stanley Road, Jaffna, Sri Lanka.

தகவல் தொழில் நுட்பப் பூங்காவின் விசேட பயிற்சி நெறியான **Diploma in Information Technology (Basic Level) Batch -I** முடிவுற்றது. அக் கற்கைநெறியை பூர்த்திசெய்தவர்களுக்கு அதன் அடுத்த பிரிவானது ஆரம்பிக்கப்பட இருக்கிறது. முன்னர் மேற்படி கற்கை நெறியில் கற்ற மாணவர்கள் ஆரம்பிக்கப்பட இருக்கும் கற்கைநெறிக்கான பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள் ளப்படுகின்றனர். இந்தவருடத்திற்கான அதன் **Basic Level** 2ஆவது பிரிவு ஆரம்பிக்கப்பட இருப்பதனால் மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பதிவுகள் அனைத்தும் எதிர்வரும் 15-02-2003 இற்கு முன்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும்.**

**முக்கிய அறிவித்தல்**

தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த இணையசேவையை மீண்டும் ஆரம்பித்திருப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். அங்கத்தவர்கள் மீண்டும் தங்களின் பதிவினை மேற் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

-பணிப்பாளர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.